
ஆரம்பம் 1969 பெப்ரவரி

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

அறிவோம்.. அறிவிப்போம்...

சமய – சமூக – இலக்கிய வெளியீடு




"சூரியனைப் பார்க்க நாம்
விளக்கை எடுத்துக்கொண்டு போவதில்லை,
அதன் ஒளியிலேயே
அதைப் பார்க்கிறோம்.
கடவுளைக் காண
கடவுளின் அருள்தான் தேவை!"

"உணர்ச்சிகள் கொந்தளிக்கும்போது
மனம் என்ற சூத்திரக் கயிற்றை
நாம் நம் வசம்
எப்போதும் வைத்திருக்க வேண்டும்"

50/=

ஏப்ரல் – 2022

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - [illegible] பெப்ரவரி

மலர் - 53 இதழ் - 04

ஏப்ரல் - 2022



ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிக்ஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெனிஸியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்



வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


உள்ளே...


| | |
|---|---|
| உயிர்ப்பின் உட்பொருளை | 02 |
| மாணவர் பக்கம் | 05 |
| ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவை | 06 |
| துளிர்ப்பு | 09 |
| ஒரு வெண்மணற் கிராமம் | 10 |
| கடுகுக் கதை | 13 |
| பிரச்சினைகளில் விலகி நின்று | 14 |
| சோதனையா? சாதனையா? | 16 |
| இலக்கிய மஞ்சரி | 18 |
| அல்லேலூயா பாட | 19 |
| தீரனியம் | 20 |
| என்னதான் நடக்கின்றது | 21 |
| மாண்புமிகு மகளிர் | 23 |
| மண்ணகம் பொலிவுற | 24 |
| திருஅவைச் செய்திகள் | 25 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| போட்டி முடிவுகள் | 28 |



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=

(தபால் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

**அன்புமிக்க சகோதர சகோதரிகளே!**

இம்மாதம் எமது கிறிஸ்தவ விசுவாசத்தின் உச்சகட்ட நிகழ்வுகளான நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து வின் பாஸ்கா மறைபொருளை தியானிக்கின்ற மாதமாகும். வருடத்தில் 52 வாரங்கள் இருந்தாலும் ஒரு வாரத்தை தான் நாம் புனித வாரம் என அனுஷ்டிக்கிறோம். அந்த வாரத்தை இம்மாதம் நாம் கடந்து செல்ல இருக்கின்றோம். இவ்வாரத்தில் தான் இயேசுவினுடைய வாழ்வின் முக்கிய நிகழ்வுகளான அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவை இடம்பெற்றன. இதனைதான் நாம் பாஸ்கா மறைபொருள் என்கிறோம்.

இம்மாதம் எமது விசுவாச வாழ்வில் மாத்திரம் அல்ல மாறாக எமது நாட்டு அரசியல், பொருளாதார நிலைமை களைப் பார்க்கும்போதும், இம்மாதம் நாம் தொடர்ந்து கடினமான நிலைமைகளையே கடந்து செல்ல வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் அடிப்படைத் தேவைகளுக்கான தட்டுப்பாடும், அதிகளவான மின்சார துண்டிப்புகளும், பொருட்களின் விலைகளில் தொடர் அதிகரிப்புகளும், அரசியல் தலைவர்களின் அலட்சியப் போக்கும் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்த, மக்கள் அதிகளவாக வீதிகளுக்கு இறங்கி அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இப்படியாக எமது நாடு என்றும் இருந்திராத பின்னடைவையும் வரலாறு காணாத அரசியல் சிக்கல்களையும் எதிர்நோக்கியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை பாதிப்படைந்துள் ளது. அதுமட்டுமல்லாது பல்வேறுபட்ட பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன.

இப்படியானதொரு சூழ்நிலையில்தான் நாம் உயிர்ப்புப் பெருவிழாவையும் கொண்டாட இருக்கின்றோம். முகநூலிலும், இணைய வலை தலங்களிலும் நாட்டின் சூழ்நிலை கண்டு பல்வேறு கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றன. இதில் விசித்திரம் என்னவென்றால், பலரும் பதிவிடுகிறார்கள் சகோதர இன மக்களைக் குறிப் பிட்டு, ‘இவர்களுக்கு இந்நிலை வரத்தான் வேண்டும், நிக்கட்டும் வரிசையில், படட்டும் பாடு.... இதைத்தானே நாமும் கடந்த வருடங்களில் அனுபவத்தோம்....’ என்று. உண்மைதான், இல்லாமல் இல்லை. எம்மக்கள் அனுபவித்த துன்பவேளையில் பிற இனத்தவர்கள் வேடிக்கை பார்த்ததும் உண்மை; பாற்சோறு பொங்கி கொண்டா டியதும் உண்மைதான். ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமை அவர்களுக்கு மாத்திரமல்ல: நமக்கும் நம் மக்களுக்கும்தான் என்பதை உணரவேண்டும். எல்லோருக்கும்தான் எரிபொருள் இல்லை. எல்லோருக் கும்தான் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. எல்லோரும்தான் வரிசையில் நிற்கிறோம். எல்லோருக்கும்தான் அத்தியா வசிய அடிப்படைப் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, நாம் பழிவாங்குகிற எண்ணத்திலோ அல்லது முரண்பட்ட சிந்தனையிலோ இந்த நிலைமையை அணுகக்கூடாது. அது ஒரு நல்ல மனிதமும் அல்ல; கிறிஸ்தவ அணுகுமுறையும் அல்ல. பஞ்சம் எல்லோருக்கும் பொதுவானது என்பதை உணர்ந்தால் நல்லது.

ஆகவே, இத்தவக்காலம் உண்மையிலேயே சோதனையின் காலமாக எம்மைப் பல சோதனைகளுக்கு உட்படுத்தினாலும் இயேசு சோதனையை வென்றது போன்று நாம் இந்நிலைமையை சரியான கண்ணோட்டத் தோடு அணுகி அதற்கான தீர்வையும் விடுதலையையும் பெற வேண்டும். அடிப்படையில் நாம் மனித நேயத்தோடு சிந்திக்க வேண்டும்; செயற்பட வேண்டும். மனித நேயமும் கிறிஸ்தவ அணுகுமுறையும் இல்லாதபோதுதான் கேடுகள் எமக்கு அதிகரித்துக்கொண்டே போகின்றன. இயேசு சொன்னார், “இதைவிட கேடானது உமக்கு நிகழாதிருக்க இனி பாவம் செய்யாதே....” (யோவான் 5:14) என்று. நாம் உயிர்த்த கிறிஸ்துவின் மக்கள். பிறரின் வேதனை கண்டு மகிழ்ந்து குருடர்களாய் இராமல் நாமும் அதே வேதனையைத்தான் அனுபவிக்கிறோம் என்பதை உணர்ந்து மனித நேயத்தோடு இந்த நாட்களிலே வாழ முயற்சி எடுப்போம்; நாட்டின் நிலை மாற இறைவனிடம் பிரார்த்திப்போம்.


**உயிர்த்த கிறிஸ்து இயேசு எம் பாவங்களை மன்னித்து நேரிய சிந்தனையை எமக்கு வழங்குவாராக!**

– ஆசிரியர் –

# உயிர்ப்பின் உட்பொருளை உணர்வோம்



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



“**பி**றப்பு என்பது எவ்வளவுக்கு உண்மையோ அவ்விதமே இறப்பும் நிஜமானது. “நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடையது இவ்வுலகு” என்றுரைக்கும் திருவள்ளுவர், பிறப்பவர் எல்லோரும் ஒருநாள் இறப்பர் என்பது இயற்கையின் நியதி என்பதை நிஜப்படுத்தியுள்ளார். இறப்பு அல்லது மரணம் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று. இதற்கு விதிவிலக்கானவர் கிறிஸ்து ஒருவரே! அவர் வரலாற்றில் பிறந்து வரலாற்றையே மாற்றிய மைத்தவர். “அவர் இறந்து உயிர்த்தெழுவோருள் தலைப்பேறானவர் (கொலோ 1:18) என புனித சவுல் சான்று பகர்கின்றார்.

மனிதன் அன்றாடம் சந்திக்கும் சவால்களில் முதன்மையானது சாவின் பயம். சாவு போல் மனித னைப் பயமுறுத்துவதும், பலமிழக்கச் செய்வதும், எழ முடியாமல் வீழ்த்துவதும் வேறொன்றுமில்லை. ஆயினும் கிறிஸ்து ஒருவரே தமது உயிர்ப்பின் வல்லமையினால் மரணத்தை வென்று மரண பயத்தைப் போக்கி உயிர்த்த வாழ்வில் எமக்குப் பங்களித்தார். இயேசுவின் பாடுகள், மரணம் ஏற்படுத்திய காரிருளை முற்றிலும் போக்கிய பேரொளியாக உதித்தது இயேசுவின் உயிர்ப்பு. பச்சை மரம் இயேசுவே பட்டுப்போனதாக உணர்ந்த பட்ட மரங்களான திருத்தூதர்களை பச்சை மரங்களாக்கி, சாவுக்கு அஞ்சாத வேதசாட்சிகளாகத் தூண்டியது இயேசுவின் உயிர்ப்பே. நமது இறப்பையும் இனிமையான அனுபவமாக்கிய மறையுண்மை இது!

மரணத்தை வென்றவர் கிறிஸ்து ஒருவரே. அவரது உயிர்ப்பினால் எமக்கும் இறப்பின் மீது வெற்றி கிடைத்தது. அவரது உயிர்ப்பு எமக்கு கொண்டுவந்த நற்செய்தி, “நிலை வாழ்வே நிரந்தரம்! இறுதியன்று இறப்பு! நிறைவுடன் வாழ்வதன் பரிசு நிலைவாழ்வு! குறுகியது வாழ்வு! வாழுந்தன்மையே வாழ்நாட்களின் எண்ணிக்கை! வாழ்வின் முடிவன்று கல்லறை! பிறர் இதயங்களில் வாழ்வதே நிலைவாழ்வு!”

கிறிஸ்தவ மதம் உயிர்ப்பு என்னும் உறுதியான கட்டடத்தின் மீது கட்டப்பட்டுள்ள உறுதியான கட்டடம். நம்பிக்கை, மகிழ்ச்சி, ஆனந்தம் போன்றவை உயிர்ப்பு நம்மில் உருவாக்கும் கனிகள்: கொடைகள். பெரிய வெள்ளிக்கு ஒரு நாள் கழித்து திருச்சபை இயேசுவின் உயிர்ப்பை மகிழ்ந்து கொண்டாடி அக்களிக்க அழைக்கிறது. “இறந்த நம் இயேசு உயிர்த்து விட்டார்” என்று மகிழ்ந்து கொண்டாடுகின்றோம். இறப்பின் மூலம் சாவை வென்று விட்டார். இறந்தவர்களுக்கு அவர் வாழ்வு வழங்கியுள்ளார் என்பதை புனித பவுல் அடியார்,

“கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை யென்றால்

நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகியிருக்கும்" *(1 கொரி 15:14)* என விளக்குகிறார்.

இன்றைய உலகின் சூழலில் ஒரு கிறிஸ்தவராக, குருவாக, துறவியாக நாம் சந்திக்கும் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை நாம் பட்டியலிட்டாலும், நாம் நம்பிக்கை இழப்பதில்லை. "நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்." *(1 கொரி 4:8-10)* என்கிறார்.

நம்மைத் துன்பங்கள் சுக்குநூறாக உடைத்தாலும், உடைபடும் நமக்குள்ளிருந்து வெளிப்படும் உயிர்ப்பின் ஒளிரும் ஒளியை யாராலும் அணைக்கவோ அழிக்கவோ முடியாது. உயிர்ப்பு விழா நம் அனைவரையும் தன்னலம், பாவநாட்டம், மதவெறி, சாதிவெறி, பணவெறி, பதவிவெறி, மனித நேயமற்ற தன்மை போன்றவற்றிக்கு மரித்து, கிறிஸ்துவில் ஒளியாக, உண்மையாக, நேர்மையாக, நீதியாக, சமத்துவமாக, மனித நேயமாக உயிர்க்க அழைக்கிறது. ஏனெனில், "கிறிஸ்துவோடு இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" *(உரோ 6:8)*.

யோபு, பவுல் போன்ற நீதிமான்கள் உயிர்த்த வாழ்வுக்கு சான்று பகர்ந்துள்ளதைக் கேட்போம்: "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன். ஆண்டவர் அளித்தார். ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக" (யோபு 1:21) என்றார். இவ்வளவு பெரிய இழப்பிலும் வேதனையிலும் அவர் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையை இழக்கவில்லை. மாறாக மிகுந்த கவலையோடு இழப்பினை ஏற்றுக்கொள்கிறார் ஆண்டவரைப் போற்றிப் புகழ்கிறார்.

புனித பவுலடியாரும் அத்தகையதோர் சான்றினைப் பகர்கின்றார்: "நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையே. அதை இறுதிநாளில் ஆண்டவர் எனக்குத் தருவார். நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்" *(2 திமோ 4:7-8)*.

பவுல் தன் வாழ்வின் இலக்கை பின்வருமாறு விளக்குகின்றார். "உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன்பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதற்காகத்தான் நான் இவ்வாறு கருதுகிறேன். திருச்சட்டத்தின் அடிப்படையில் நான் கடவுளுக்கு ஏற்புடையவனாக இயலாது. கிறிஸ்துவின்மீது நான் கொண்டுள்ள நம்பிக்கையால்தான் அவருக்கு நான் ஏற்புடையவனாக முடியும்.

இந்த ஏற்புடைமை கடவுளிடமிருந்து வருவது. நம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்துவையும், அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவும், அவருடைய துன்பங்களில் பங்கேற்று சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன். அப்பொழுதுதான் நானும் இறந்தோருடன் உயிர்த்தெழ முடியும்" *(பிலி 3:7-11)*.

சாகாமல் உயிர்ப்பில்லையென்பது உண்மையானால், நமக்குச் சாவும் இல்லை உயிர்ப்பும் இல்லை. ஏனெனில் நம்மோடு பிணைந்திருக்கின்ற சாதி மக்களைப் பிணைக்கும் சக்தியாக இல்லாமல், பிளவுபடுத்தும் சக்தியாக, சுயமரியாதையை இகழும் சக்தியாக, மனிதத்தை ஏளனப்படுத்தும் சக்தியாக நிலவுகையில் இயேசுவின் கொள்கையைச் சுமந்து வாழ்கிறோம் என்பது பொய்யில்லையா?

## உயிர்ப்போமா...?

கிறிஸ்துவின் உயிர்ப்பை ஒரு சடங்காக மட்டும் நடத்தி முடித்துவிட்டு உறங்கிப் போனதல்ல கிறிஸ்தவம். கிறிஸ்தவத்தின் வரலாற்றில் எங்கெல்லாம் கிறிஸ்தவம் தன்னை அறிமுகப்படுத்தியதோ அங்கெல்லாம் வெறும் மதம் பரப்பும் பணியை மட்டும் செய்து ஓய்ந்து விடவில்லை. கிறிஸ்து

காட்டிய மதிப்பீடுகளை மக்கள் ஏற்று நடக்க வழி காட்டிய சமயம் இது.

கிறிஸ்துவின் உயிர்ப்பு, அவர் இறப்பில்தான் இருக்கிறது என்றால் நாமும் சில நல்ல கோட்பாடுகளுக்கு உயிர் கொடுக்க செத்தே ஆக வேண்டும். உறக்கம் நீக்கி உயிர்ப்போமா? இயேசு உயிர்த்து விட்டார் என்பது மட்டுமல்ல இவ்விழாவிற்கான காரணம்: இயேசு நம் அனைவரையும் உயிர்ப்பித்துள்ளார் என்பதுமேயாகும். கடவுளின் மக்களாய் இயேசுவின் உயிர்ப்பை நம் வேதமாக்கி, 'அல்லேலூயாவை' நம் கீதமாக்கி உயிர்ப்பு வாழ்வு வாழ்வோம்!

**இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்!**

## உக்ரைனில் புலம்பெயர்ந்தோருடன் இந்திய அருள்சகோதரி



உக்ரைன் நாட்டின் மேற்கிலுள்ள Mukachevo நகரில் பணியாற்றுகின்ற, புனிதர்கள் யோவான், மற்றும் மாற்கு அருள்சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருள்சகோதரி Ligy அவர்கள், இந்நகர் வழியாக சுலோவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயரும் உக்ரைன் மக்களுக்கு உதவி வருவதாகக் கூறியுள்ளார்.

தனது சபையின் 17 அருள்சகோதரிகளோடு சேர்ந்து புலம்பெயர்ந்தோருக்கு உதவிவரும் 48 வயது நிரம்பிய அருள்சகோதரி Ligy அவர்கள், நாங்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், காவல்துறை மிகப்பெரிய பணியை ஆற்றுவதாகவும், இந்திய மாணவர்களில் பலர் நாட்டிற்குத் திரும்பிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

1845ம் ஆண்டில் பிரான்சின் அருள்பணி Pierre Paul Blanck அவர்களால் புனிதர்கள் யோவான் மற்றும் மாற்கு அருள்சகோதரிகள் சபை ஆரம்பிக்கப்பட்டது. கேரளாவைச் சேர்ந்த அருள்சகோதரி Ligy அவர்கள், Mukachevo கன்னியர் இல்லத்தின் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

*(AsiaNews)*




கி.பி. 60ம் ஆண்டில், திருத்தூதர் பவுலடியார், கைதியாக உரோமைக்கு வந்த கப்பல் பயணத்தில், கடலில் உருவாகிய பேய்ப்புயலில் கப்பல் சிக்கி சேதமடைந்தது. அவ்வேளையில் பவுலடியார் கடலில் நீந்திவந்து கரை ஒதுங்கிய இடம் மால்ட்டா தீவின் ராபாட் (Rabat) நகர கடற்கரை. அங்கே நெருப்பு மூட்டி குளிர்காய்ந்துகொண்டிருந்தபோது விரியன் பாம்பு ஒன்று அவரது கையைப் பற்றிக் கொண்டது. அவர் அதை உதறிவிட்ட பிறகு, வெகு நேரம் ஆகியும் அவர் நலமாக இருந்ததைப் பார்த்த மக்கள் வியப்புற்று, அவர் ஒரு தெய்வம் என்று சொல்லத் தொடங்கினர். பவுலடியார் அங்கு மூன்று மாதங்கள் தங்கி, மால்ட்டா மக்களுக்கு நற்செய்தி அறிவித்தார், புதுமைகள் பல ஆற்றினார், மற்றும் கிறிஸ்தவத்தின் விதைகளை விதைத்தார். அச்சமயம் அப்பகுதியின் ஆளுநராக இருந்தவரின் தந்தையான புனித புப்ளியு என்பவர் உட்பட, பல்வேறு மக்களுக்கு புனித பவுல் குணமளித்தார் என்று திருத்தூதர் பணிகள் நூலில் (தி.ப.28) வாசிக்கிறோம். அச்சமயத்தில் அவர் தங்கியிருந்த இடம்தான், இப்போதுள்ள புனித பவுல் அடிநிலக் கெபியாகும். இக்கெபி, ராபாட் நகரில் அமைக்கப்பட்டுள்ள அழகிய புனித பவுல் பசிலிக்காவிற்குக் கீழ் அமைந்துள்ளது. இவ்விடம் தொடக்க காலத்திலிருந்தே கிறிஸ்தவர்களின் வழிபாட்டு இடமாக உள்ளது.

1990ம் ஆண்டு மே 27ம் திகதி திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்களும், 2010ம் ஆண்டு ஏப்ரல் 17ம் திகதி முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும், இந்த புனித பவுல் அடிநிலக் கெபிக்குச் சென்று செபித்துள்ளனர்.

**- வத்திக்கான்**



# கிறிஸ்தவம் மாணவர் பக்கம்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

தொடர் XIII

- நில்மினி கஜேந்திரன்

**மாணவர் பக்கம்**
மார்ச் 2022
விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 3 | 5) 4 | 9) 1 |
| 2) 3 | 6) 4 | 10) 3 |
| 3) 2 | 7) 1 | |
| 4) 4 | 8) 2 | |

**1. யோசேப்பை முன்பின் அறிந்திராத எகிப்தில் தோன்றிய மன்னன் யார்?**

1. பார்வோன் 2. எரோபோவாம் 3. இராம்சேஸ்
4. யோவேல் 5. போர்த்திபார்

**2. இராம்சேஸ் இஸ்ரயேல் மக்களுக்கு பயந்ததற்கான காரணங்களுள் ஒன்று:**

1. அவர்கள் எண்ணிக்கையில் அதிகரித்து காணப்பட்டதால்
2. கடுமையாக வேலை செய்ததால்
3. அவர்கள் வல்லமையுள்ளவர்கள் என்பதால்
4. தெய்வபயமுடையோர் என்பதால்
5. நன்றாக வேலை தெரிந்தவர்கள் என்பதால்

**3. இஸ்ரயேல் பார்வோனுக்காக கட்டிய இரு நகர்களைக் குறிப்பிடுக:**

1. தீர், சீதோன் 2. பித்நோம், இராம்சேசு 3. ஆயின், தீர்
4. எகிப்து, சாலமி 5. யோர்தான், சீகார்

**4. மோசேயின் பெற்றோர் பெயர் என்ன?**

1. அன்னா, எல்கானா 2. அம்ரான், யோகேபெத் 3. எலிசபத், சக்கரியா
4. பார்வோன், மிரியாம் 5. யோராம், தீனா

**5. மிதியான் நாட்டிற்கு அர்ச்சகராக இருந்தவர் யார்?**

1. அன்னா 2. சாமுவேல் 3. சிம்சோன் 4. இத்திரோ 5. யோவாக்

**6. மோசே பயன்படுத்திய இறைவாக்கினர் உரைக்கும் வசனங்களுள் ஒன்று.**

1. நீ போய் கூறு 2. ஆண்டவர் கூறுகிறார் 3. என்கிறார் இறைவன்
4. ஆண்டவர் நம் இறைவன் 5. நான் கூறுவதைக் கேளுங்கள்

**7. குரு, யாவே, எலோகிம் ஆகிய மரபுகளின் ஒன்றிணைப்பின் அடிப்படையில் எழுதப்பட்ட விடயம்:**

1. பத்து பெரும் துன்பங்கள் 2. பெயர் சூட்டும் நிகழ்வு 3. விருத்தசேதனம்
4. அர்ப்பண நிகழ்வு 5. திருமுழுக்கு

**8. கிரேக்க பிரதியான செப்டுவாஜிந்தில் நபி என்பதன் எபிரேய பதம்.**

1. டுஅமில் 2. நபி 3. பிறபெற்றால் 4. நதாப் 5. றதா

**9. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் பணிகள் பற்றி கூறும் நூல்.**

1. எரேமியா, புலம்பல் 2. சாமுவேல், அரசர்கள் 3. புலம்பல், திருப்பாடல்
4. அரசர்கள், நாளாகமம் 5. நாளாகமம், புலம்பல்

**10. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் பணியில் காணப்பட்ட விசேட பண்புகளில் ஒன்று.**

1. குழுவாகச் செயற்படல் 2. தானாக முன்வருதல்
3. ஒற்றுமையாக வாழல் 4. தலைமைத்துவம் ஏற்காதிருத்தல்
5. குறிப்புக்களை எழுதிவைத்தல்




# ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக
## For a Synodal Church

அருட் கலாநிதி அ. கிறிஸ்ரி றுபன் பெர்னாண்டோ

**தொடர் - 03**

உலக ஆயர்கள் மாமன்றத்தின் வெற்றியானது பங்குகள் மட்டத்திலும் மறைமாவட்ட சிறப்பு செயலமர்வுகள் மத்தியிலும் இடம்பெறும் ஆலோசனைகள் கருத்துப் பகிர்வுகளிலேயே தங்கியுள்ளது. இந்த விதத்திலே இறைமக்களின் உரையாடலை இன்னும் அதிகமாகச் செயல்படுத்த, செபவழிமுறைகள், விவிலியத் தியானங்கள், திருஇசை, ஓவியங்கள், பதாதைகள், மற்றும் கலாசார நிகழ்வுகளைப் பங்குகள் ரீதியாகவும், மறைமாவட்ட வாரியாகவும் ஊக்குவிக்கலாம். தேவைகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு பல பங்குகள் ஒன்றுசேர்ந்தும் இந்த கருத்தாக்க உரையாடலை மேற்கொள்ளலாம்.

### 3.2 மறைமாவட்டத்தில் சிறப்பு ஆயத்த ஆலோசனைகள்

மறைமாவட்டங்களிலே, பங்குப் பேரவையின் ஒத்துழைப்புடன் பங்குகள், மறைமாவட்ட செயற்குழுவின் உதவியைக் கொண்டு, ஒவ்வொரு பங்கிலும் கவனிக்கப்படாமல் அல்லது பேசப்படாமல் அல்லது பங்குச் செயற்பாடுகளில் அக்கறையற்ற இறைமக்களுக்கு இந்த உலக ஆயர்கள் மாமன்றத்தின் கூட்டொருங்கியக்க ஆயத்த செயல்முறைகளைக் கொண்டுசேர்க்க வேண்டும் (It has to go to the periphe ral lebels and areas).

இந்த மறைமாவட்டங்கள் ரீதியிலான தயாரிப்பிலே, செவிமடுத்தல் படிநிலையிலே இறைமக்கள், எழுப்பப்படும் கேள்வித் துணுக்குகளுக்கு தனியாகவோ, குழுக்களாகவோ தங்களது மனப்பதிவுகளை, எண்ணங்களை, எதிர்வினை உணர்வுகளை வெளிப்படுத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

தற்காலத்திலே, இந்தக் கொடிய கொள்ளை நோயின் தாக்கத்தால் ஓரிடம் விட்டு இன்னொரு இடத்திற்கு நகர முடியாத சூழ்நிலையும் முகமுகமான ஒன்றுகூடல்களும் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறபோது, “ஆன்லைன்” (online) வழியாக தொலைபேசி அழைப்புகள் மற்றும் பல்வேறுபட்ட சமூகத் தொடர்பாடல் வலைத்தளங்களைப் பாவித்து குழுக்களுக்கான கலந்துரையாடல்களை மேற்கொண்டு இறைமக்களின் கருத்துக்கள், கேள்விக் கொத்துக்கள், ஆலோசனைகள், மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 3.3 கூட்டொருங்கியக்க செயல்முறையிலே ஆயரின் பங்கு

ஆயர்களினது மேய்ப்புப்பணி சார்ந்த அதிகாரம் இல்லாமல் இயங்க முடியாது. மறைமாவட்ட ஆயரின் ஒரு சிறப்புக் கடிதம் அல்லது வீடியோ காணொளி இந்த வகையிலே இறைமக்கள் மத்தியிலே ஒரு நல்ல தெளிவையும், விளக்கத்தையும் கொடுக்க முடியும். இந்த தெளிந்து தேர்தல் பயணத்திலே அனைவரின் கருத்துக்களுக்கும் ஆழமாக செவிமடுப்பதே ஒரு ஆயரின் சிறப்புக் கடமையாகவும் காணப்படுகின்றது. இறுதியாக, மறைமாவட்ட ஆயர் அவர்களால் மறைமாவட்டத்திலே ஏற்படுத்தப்பட்டு அங்கே கருத்துக்கள் தேர்ந்துதெளியப்பெற்று அது நிறைவு செய்யப்படல் வேண்டும். இதில் வருகின்ற அனைத்துக் கருத்துக்களையும் ஆயர் தலைமையிலே தொகுத்து பகுப்பாய்வு செய்து அவை இறுதியிலே தலஆயர் பேரவையின் செயலருக்கு இந்த விடயம் குறித்த மறைமாவட்ட பொறுப்பாளரால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### 3.4 மாமன்றத்தின் மட்டிலே குருக்களினதும் தியாக்கோன்களினதும் பங்களிப்பு

குருக்களினதும், தியாக்கோன்களினதும் பணியானது **இரண்டு முக்கியமான புள்ளிகளைக் கொண்டுள்ளது.** ஒருபுறம், மறைமாவட்ட ஆயர்;

மறுபுறம் அவர்களின் பணிப்பொறுப்பில் ஒப்படைக் கப்பட்டுள்ள இறைமக்கள். இந்த வகையிலே, **அருள்நிலைப் பணியாளர்கள்** அனைவருமே தங்களது ஆயருக்கும், அவர்கள் பணிபுரிகின்ற இறைமக்களுக்கும் **இடையிலே இணைப்பாளர் களாக** காணப்படுகின்றனர்.

குருக்களும், தியாக்கோன்களும் ஆயர்களுக் குப் பதிலாக இறைமக்களோடும், இறைமக்களுக்குப் **பதிலாளிகளாக** ஆயரோடும் உரையாடுபவர்களாக இருக்கின்றனர். இவ்வாறாக, இறைமக்களின் ஒன்றிணைப்புப் பயணத்திலே இயேசுவின் மறையு டலாகிய திருஅவையினை வளர்ப்பதிலே அவர்கள் **முகவர்களாக** செயற்படுகின்றனர். மேலும், அவர் கள் இறைமக்களின் வளர்ந்துவரும் தேவையினை அறிந்து, **புதுப்பித்தலின் தூதர்களாக,** தூய ஆவியார் காட்டும் பாதையில் அவர்களை இட்டுச் செல்லவே அழைக்கப்பட்டுள்ளனர். இறுதியாக, அவர்கள் உண்மையான கூட்டொருங்கியக்கத்தின் ஆன்மீக அனுபவத்தை ஊக்குவிக்கின்ற **செபத்தின் மனிதர்களாகவும்** காணப்படுகின்றனர்.

இந்த வகையிலே, உலக ஆயர்கள் மன்றத் தின் கூட்டொருங்கியக்கப் பயணத்திலே, குருக்க ளும் தியாக்கோன்களும் இறைமக்களை இந்த செயல்முறைப் போக்கிலே வழிநடாத்துவதிலே சிறப்புப் பங்களிப்பை ஆற்றுவதற்குக் கடமைப் பட்டுள்ளார்கள். அனைத்திலும் முதன்மையாக, அவர்கள் **இறைமக்கள் மத்தியிலே ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்த,** இந்த மாமன்றத்தின் கூட்டொ ருங்கியக்கப் பண்பையும், அது குறித்த தெளிவை யும், பங்குகளிலும், பலதரப்பட்ட பணிகளிலும், அவர்கள் சேவையாற்றுகின்ற இயக்கங்களிலும் விளக்கமளிக்க வேண்டும்.

அவர்கள் குருக்கள் மன்றத்திலே இது குறித்து கலந்தாலோசித்து, இந்த உலக ஆயர்கள் மாமன்றத்தின் கூட்டொருங்கியக்கச் செயல்முறை யினை மறைமாவட்ட ரீதியிலே பயனுள்ளதாக்க ஒன்றுபட்டு செயற்படல் வேண்டும். அத்தோடு, மறைமாவட்ட ஆயர் மற்றும் இப்பணிக்கென மறைமாவட்டத்திலே பொறுப்பாக ஏற்படுத்தப் பட்டுள்ள நபரோடு **தொடர்புகளை ஏற்படுத்தி இவ்விடயம் குறித்து புதிய வழிகளைக் கண்டு பிடிக்க முடியும்.**

### 3.5 இருபால் துறவிகள்

“ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான” பயணத்திலே எதிர்பார்க்கப்படுபவை எவை? வத்திக்கானில் உள்ள உலக ஆயர்கள் மாமன்றத் தின் செயலர் கர்தினால் மாரியோ கிறேக் (Mario Card. Grech) அவர்கள் உலகத் திருஅவையிலுள்ள அனைத்து இருபால் துறவியருக்கும் (Religious), அர்ப்பணிப்பு நிலையிலே இருப்பவர்களுக்கும் (Consecrated Persons) இந்த உலக ஆயர்கள் மாமன்றப் பயணத்தைக் குறித்து எழுதியுள்ள மடலின் சாராம்சம். “திருஅவை மிகவும் தீர்க்கமான ஒரு முடிவிற்காக காலடி எடுத்துவைத்திருக்கின்ற இந்த வேளையிலே, உங்களது விலைமதிக்க முடியாத இறையழைத்தல் என்னும் கொடை முழுத் திருஅவையையுமே வளப்படுத்துகின்றது. ஏனெனில் நீங்கள்தான் இந்த மாமன்றப் பயண மானது அடிப்படையாகவும் உண்மை நிலையிலும் முன்னெடுத்துச் செல்லப்பட காவலாளிகளாகவும் (பாதுகாவலர்கள்), சாட்சிகளாகவும் நமது திருத் தந்தையால் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்” "Cum Petro et SubPetro (with Peter and under Peter) A Religious submission of mind and will. Church is Mother and Teacher (Master et Magistra) என்று குறிப்பிடுகின்றார். அதாவது, நாம் பேதுருவுடன் ஒன்றித்தும் இருக்கின் றோம். மேலும், பேதுருவின் ஆழுகையின் கீழும் நமக்குத் தரப்படுகின்ற படிப்பினைகளை நாம் கடைப்பிடிக்கவும் வேண்டும். இதுதான் நமக்கும் திருஅவைக்குமுள்ள ஒன்றிப்பு. துறவிகளாகிய உங்களிடம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வொரு தடவையும், “எனக்காக செபியுங்கள்” (Pregate per me) என்று இறைமக்களைக் கேட்பதைப் போல, இந்த மாமன்றப் பயணம் முழுவதுமே துறவிகளாகிய உங்களிடம் ஒரு சிறப்புப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதுதான், நீங்கள் தொடர்ந்து இந்த மாமன்றப் பயணத்திற்காக உங்களது குழுமங்களிலும், தனிப்பட்ட செபங்களி லும் செபிக்க வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ், “நாம் செபத்திலே வேரூன்ற வேண்டும். செபத்தில் வழிநடாத்தப்படாத நமது செயற்பாடுகள் பலனற்ற வையாகவும், நமது செய்திகள் வெறுமையான தாகவும் காணப்படுகின்றன” (நற்செய்தியின் மகிழ்ச்சி, *259*) என்கிறார்.

**‘‘துன்பம் அனுபவித்த காலங்களை மறந்து விடு; ஆனால், அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே’’ – அல்பேனியா**

**3.6 மறைமாவட்டங்களில் கூட்டொருங்கியக்கப் பாதை வரைபு**

அ). இப்பணிக்கென மறைமாவட்டத்திலே பொறுப்பாக ஒரு நபரை (நபர்களை) தேர்ந்தெடுத்தல்.

ஆ). மறைமாவட்ட ரீதியிலே மாமன்றக் குழுவொன்றை ஏற்படுத்துதல்.

இ). மறைமாவட்டத்திற்குத் தேவையான பாதையைத் தெளிந்து தேர்தல்.

ஈ). பங்குபற்றும் முறையைத் தெரிவுசெய்தல்

உ). குழுக்களுக்கான ஒருங்கிணைப்பாளர்களை மாமன்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு தெரிவு செய்தல்.

ஊ). மறைமாவட்ட மாமன்ற குழுவினருக்கும் மற்றும் பங்குகளின் ஒருங்கிணைப்பாளருக்குமான "நோக்குநிலைப் பட்டறை" (Orientation workshop) ஒன்றை நடாத்துதல்.

எ). அனைவருக்கும் தகவல்களைப் பரிமாறுதல்

ஏ). மாமன்ற ஆலோசனை செயல்முறையை செயல்படுத்ததல், கண்காணித்தல் மற்றும் வழிகாட்டுதல்.

ஐ). மறைமாவட்ட முன்னாயத்த மாமன்றம்

ஒ). மறைமாவட்டத் தொகுப்புக்களை ஆயத்தம் செய்வதும், அவற்றை சமர்ப்பிப்பதும்.

**3.7 ஒட்டுமொத்தத்தில்? (In Totality What?)**

1. வெறுமனே வெளித் தயாரிப்புக்கள் அல்ல (Formalism - Not admiring the church from outside but actually stepping inside)
2. அறிவு சார்ந்த விடயமாக மாத்திரம் இந்த மாமன்றத்தை மாற்றிவிடக் கூடாது (Intellectualism - This is not material for study group). தளத்திலே நின்று சிந்திக்க வேண்டும்.
3. வழக்கமாக இப்படித்தான் என்ற மனநிலை மாற்றம் பெற வேண்டும் (complacency). இது போதும், வழமையாக இப்படித்தான், இதுதான் சம்பிரதாயம் என்ற மனநிலை, we have always done it this way. Better not to change.

**3.8 ஆலோசனைக்கான முக்கிய கேள்வி**

உலக ஆயர்கள் மாமன்றமானது பின்வரும் கேள்வியை எழுப்புகின்றது: கூட்டொருங்கியக்கத் திருஅவையானது, நற்செய்தியைப் பறைசாற்றுவதிலே, "ஒன்றிணைந்து பயணம் செய்கிறது". இந்த "ஒன்றிணைந்து பயணம் செய்தல்" என்பது எந்தளவிற்குப் பங்குத் திருஅவையிலே இடம்பெறுகின்றது? நாம் இந்த "ஒன்றிணைந்த பயணத்தில்" வளர்வதற்கு எவ்வாறான வழிமுறைகளை மேற்கொள்ள தூய ஆவியானவர் நம்மை அழைத்து நிற்கிறார? இறைமக்களுக்கு இந்தக் கேள்விக்கான விடையின் தேடலில் உதவிட, 10 கருப்பொருள்கள் (Themes), "கூட்டொருங்கியக்கம்" என்ற முக்கியமான பண்பைச் சுட்டிக்காட்டுகின்றன (உலக ஆயர்கள் மாமன்றத்தின் செயல்முறைப் பயணத்திற்கான தயாரிப்பு ஆவணம், PD, 26).

– நிறைவு



"அமைதி எப்போதும் இயலக்கூடியதே மற்றும், நம் இதய வேண்டுகோள் அமைதியின் ஆணிவேர், இதயவேண்டல் அமைதியை எங்கும் பரவச்செய்யும்"

உக்ரைன் நாட்டிற்கு வழங்குவதற்கென்று, திருத்தந்தை வழங்கியுள்ள மருத்துவ அவசர ஊர்தி ஒன்றுடன், திருத்தந்தையின் தர்மச்செயல்களுக்குப் பொறுப்பான, கர்தினால் Konrad Krajewski அவர்கள், மார்ச் மாதம் 31ம் தேதி உக்ரைன் நாட்டின் Lviv நகரத்திற்குப் புறப்பட்டுள்ளார் என்று, திருப்பீட செய்தித் தொடர்பகத்தின் இயக்குனர் மத்தேயோ புறுனி அவர்கள் அறிவித்துள்ளார்.

உக்ரைன் நாட்டிற்கு இரண்டாவது முறையாகச் செல்கின்ற கர்தினால் அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நன்கொடையாக வழங்கியுள்ள இவ்வாகனத்தை திருத்தந்தையின் ஆசீருடன் எடுத்துச் செல்கின்றார்.

கடந்த வாரங்களில் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிக அளவில் அதிகரித்துள்ள Lviv நகரத்திற்கு, கர்தினால் இந்த மருத்துவ ஊர்தியை வழங்குவார் என்றும் புறுனி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# துளிர்ப்பு



**டெனிஸ்டன்** - *சொறிக்கல்முனை*

கழுவேற்றப்பட்ட மரம்
கழற்றி இறக்கப்பட்ட உடல்
கடைசியாய் மூடிய கல்லறை
முற்றுப்பெற்ற காவியம்
மூச்சை விட்ட தேகம் எல்லாம்
புது அத்தியாயம் பெறுகின்றது.

கல்லறைக்கு போன பின்னும்
கல்லை மூடி வந்த பின்னும்
கண்டவர் அகன்ற பின்னும்
காணவில்லை அவரை என்று
பெண்கள் தேடிய போது
பேதையர் கேட்டனர்
தேவ அஞ்சல் காரன் அவர்
தேகம் உயிர்ப்பு கொண்ட கதை.


புதை குழி போனவனவன்
கொன்று புதைக்கப்பட்டவனவன்
புது உயிர் பெற்று போய்விட்டான்
என்ற கதை.
பண்டித மணிகள் வாழ்ந்த தேசம்
பட்டென்று நம்பாமல்
கொண்டது சந்தேகம்...

நம்புவாயா மகனே
நம்புகிறாயா மகனே
திதும் தோமாவுக்காய்
தேடி அவர் நின்றது போல்
கண் முன் நீ வர வேண்டும்
காயங்கள் நான் காண வேண்டும்
விரலை நான் இட வேண்டும்
என்று வீர வசனம் பேசியே
விசுவாசத்தை கொச்சை படுத்துவதோ...?

கண்டாலும் விசுவாசமில்லை கண்ணில்...
இதில் காணாது எங்கு விசுவசிப்பது மண்ணில்?
யேசு நாதன் உயிர்த்து விட்டார் மண்ணில்
அவர் என்று உயிர்க்கப் போகிறார் உன்னில்

சிலுவைகளுக்கு சிறகு கொடு
சிகரங்களை அது சீக்கிரம் தாண்டும்
விலங்குகளை கழற்றி விட்டு வெளியே வா
இங்கு பொழுது புலர்ந்து விட்டதை காண்
அஸ்தமனமான ஆண்டவன்
ஆத்தும சரீரம் பெற்று விட்டான்
செத்த ஆன்மாவை சீவியன்
காவடி வைத்து
சுத்தமாக்கி கொள் மனமே
கிறிஸ்தவனுக்கு மரணம்
மறு அத்தியாயத்தின் தொடக்கமே!







# ஒரு வெண்மணற் கிராமம்

## காத்துக்கொண்டிருக்கிறது






**அத்தியாயம் 5**

குரோட்டன்களுக்கு மத்தியிலுள்ள பாதை வழியே அவன் நடக்கையில் செளந்தரம் உருவத்தால் அழகி மட்டுமல்ல, மனதிலே செளந்தர்ய உணர்வும் கொண்டவள். அவள் செளந்தர்ய உணர்வுக்கு இப் பூந்தோட்டமே சாட்சி என்று எண்ணிக்கொண்டான் தாமோதரம். ஆனால் வீணையைப் பறிகொடுத்த சரஸ்வதி போல அவள் எட்டாம் வகுப்புச் சித்தியடைந்ததோடு வீட்டுக்குள் முடங்கி விட்டாளே என்ற எண்ணம் அவனை வதைத்துக் கொண்டிருந்தது. அவன் பின்னாலேயே செளந்தரம் வந்து கொண்டிருப்பதை அப்போது தான் கவனித்த தாமோதரம் “நீ எங்கே வருகிறாய்? என்று அதட்டினான். “உங்கட வீட்டதான் போக வேணும். மாமி பால் காய்ச்சத் தொடங்கிருவா. அவவுக்கு உதவி செய்ய வேணும். முன் படலையைக் கட்டிவிட்டு நான் பின் வழியாய் வேலி மங்கடைக்குள்ளால உங்க வீட்ட போறன். படலையைக் கட்டத்தான் உங்க பின்னால் வாறன்.”

“படலைய நான் கட்டிற்றுப் போறன். நீ பின்னால போ” “ஏன், நான் உங்களோட வாறது உங்களுக்கு விருப்பமில்லையாக்கும்” தாமோதரம் அவளைப் பார்த்துச் சிரித்தான். செளந்தரமும் சிரித்தாள். ஒழுங்கையிலே மறி ஆடு ஒன்று பிணை ஆட்டைத் துரத்தி அதைத் தழுவ முயன்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்த செளந்தரம் “ஆடு வந்திரும் அத்தான் படலையை இழுத்துக் கட்டிற்றுப் போங்க” என்றுவிட்டு வீட்டின் பின்பக்கமாக நடந்தாள்.

இனிப்பான நினைவுகளோடு தாமோதரமும் வெளியிலிறங்கிப் படலையைச் சிக்காராகக் கட்டிவிட்டு பரமனின் சலூனை நோக்கி நடந்தான்.

கோயிலடிலே பந்தரின் கீழ்க் குழுமியிருந்த பாடசாலைப் பிள்ளைகள் தேவாரம் பாடிக் கொண்டிருந்தனர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓது வார்தமை நன்நெறியுய்ப்பதும்....

சின்னதம்பி வாத்தியார் இடுப்பிற் சால்வையைக் கட்டிக்கொண்டு துலாம்பரமாக நீறு

பூசிய நெற்றியின் மைத்திற் சந்தனப் பொட்டு மிளிரக் கைகூப்பியபடி தேவாரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

## அத்தியாயம் 6

பரமனின் சலூனிலிருந்து சில யார்களுக்கு அப்பால் கோயிலின் எதிர்த்திசையில் அவ்வூர் வாசிகசாலை இருந்தது. வைரமான காட்டு மரங் களைத் தூண்களாக நட்டு அத்தூண்களின் இரு மருங்கிலும் நெருக்கமாக வரிச்சுத்தடிகளை கட்டி அத்தடிகளிடையே குழைத்த கழிமண்ணைச் செலுத்தி வைக்கப்பட்ட சுவர் அதன் மேல் ஓலைக் கூரை. ஒரு அறையும் மண்டபமும் கொண்ட நீளமான கட்டிடம், மண்டபத்துள்ளே கிடந்த மேசையின் இருபக்கமும் இருந்த டெஸ்குகளில் ஒன்றிலே தாமோதரம் சென்று உட்கார்ந்து கொண்டான். ஏற்கனவே சின்னவனும் தங்கராசனும் அருளனும் வந்திருந்தார்கள். பாலாவும் பரமனும் இன்னும் பத்துப் பன்னிரெண்டு இளைஞர்களோடு வந்து கொண்டிருந்தார்கள்.

கோயிலிலே மாணவர்கள் தம் பிரார்த்த னையை முடித்துக் கொண்டு இவ்விருவராக அணி அணியாய் முதலிலே ஆண்களும் பின்னர் பெண்க ளுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். கடைசியாய் சென்ற தலைமை ஆசிரியரிடம் பாலா ஏதோ பேசி விட்டு அவசர அவசரமாகத் தன் கூட்டத்தினரோடு வாசிகசாலையை அடைந்தான். வாசிகசாலையிற் கூட்டம் தொடங்கியது ஆரம்பத்தில் தாமோதரம் பாடினான்.

“நிரைகழலரவஞ் சிலம் பொலியலம்பும் நிமலர்நீறணி திருமேனி.....’

கூட்டத்திற்கு பாலா தலைமை வகித்தாலும் தாமோதரமே அக் கூட்டத்தில் முக்கியஸ்தனாக இருந்தான். “நாளைக்கு வரப்போகும் எம்.பி. தன் கடமைக்காகத்தான் இங்கே வருகிறார். அதற்கு தடபுடலான வரவேற்பு அவசியமில்லை. அவரிடம் நம்மூரின் குறைகளையும் தேவைகளையும் சொல்வதுதான் முக்கியமானது’ என்ற அவனது கருத்தை எல்லோருமே ஏற்றுக்கொண்டாலும் பரமனுக்கு அது திருப்தியாக இல்லை. அவனுக்கு பூமாலை, மேடை, லவுட்ஸ்பீக்கர் என்று ஒரு விழா வேண்டும்.

அதற்காக அவன் எவ்வளவும் செலவழிக்கவுந் தயார், நாளாந்தம் அவனிடம் காசும் புழக்கத்தி லுள்ளது,

ஆனாலும் மற்றவர்கள் தம் கிராமத்தின் தேவைகளை ஆராய்ந்தார்கள்.

“ஊருக்கு ஒரு உபதபாற் கந்தோர் வேண் டும். பத்துச் சத முத்திரை வாங்கவும் சின்னக் கிண்ணியாவுக்குச் செல்ல வேண்டியுள்ளது’ என்றான் அருளன்.

‘நம்ம வாசிகசாலைக்கு ஒரு நல்ல கட்டிடம் வேணும்’ என்றான் பரமன்.

‘இவையெல்லாம் வேண்டுந்தான். ஆனால் நமது கிராம மக்களின் அடிப்படைத் தேவை இவைகளல்ல. விவசாயத்தையும் கால் நடைகளையும் நம்பி வாழ்பவர்கள் நம்மூரவர். ஊரவர்களுக்கு கண்டற் காட்டு மானாவாரிக்காணியைத் தவிர வேறு காணிகளே இல்லை. அந்தமானா வாரிக் காணியும் எல்லோருக்கும் இல்லை. கந்தளாய்க் கொலனித் திட்டத்தில் நீர்ப்பாய்ச்சல் காணியும் மேட்டுக் காணியும் கொடுத்துங்கூட நம்மூரில் இருந்து இரண்டே இரண்டு குடும்பங்கள்தான் அங்கு சென்றன. மற்ற எவருமே பிறந்த ஊரை விட்டுபோக விரும்பவில்லை. ஆகவே நமக்கு முதற் தேவை கண்டக்காட்டுமானாவாரித் தரைக்கு நீர் பாய்ச்சல் ஏற்படுத்துவதுதான். அந்த வெளியில் இருந்து கூப்பிடு தூரத்தில்தான் மகாவலி கங்கை ஓடுது.

அடுத்து கண்டக் காட்டுத் துறையடிக்கு நல்ல பாதை வேண்டும். ஒரு நல்ல றோட் மட்டும் இருந்தால் நம்மூரவர்கள் மாட்டுப்பட்டிற்குச் சைக்கி ளிலோ - ஏன் காரிலேயே சென்று பாலைக் கொண்டு வரலாம். காவுதடியில் சுமக்கத் தேவை யில்லை. ஆகவே கண்டக் காட்டு வெளிக்குத் தண்ணீரும், அங்கு போகத் தெருவுந்தான் நமது முக்கியத் தேவைகள்’ என்று தெளிவுபடுத்தினான் தாமோதரம்.

கூடியிருந்த வாலிபர்கள் தாமோதரத்தை ஒரு முகமாக ஆதரித்தார்கள். எம்.பி.யிடம் கொடுப்ப தற்கான மனுவைத் தயாரிக்கும்படியும் கூட்டம் அவனைக் கேட்டுக் கொண்டது. பாடசாலை முடிந்த தும் தலைமை ஆசிரியரோடும் ஆலோசித்து அம்

மனுவை எழுதுவதாகத் தாமோதரம் ஒப்புக் கொண்டான். பாராளுமன்ற அங்கத்தவரை வாசிக சாலையிற் சந்தித்து மனுவைக் கொடுப்பதெனவும், மற்றைய விடயங்களை பாடசாலையிலேயே நடத்த வேண்டும் எனவும் கூட்டம் தீர்மானித்தது. இத் தீர்மானங்களை எடுத்து கூட்டம் முடிவடைகையில் ஏறத்தாழப் பதினொரு மணியாகி விட்டது. வேலும் மயிலும் கடையிலிருந்து பரமன் கொண்டு வந்த சோடாப் போத்தல்களை அவர்கள் குடித்துக் கொண்டிருக்கையில், வெளியே பங்குனி மாத வெய்யில் ஆலங்கேணி மணலை வறுத்துக்கொட்டிக் கொண்டிருந்தது.

“இந்தச் சுடுமணலிலே சோளங்கொட்டையைப் போட்டால் பொரிஞ்சு போகும். காண்டாவனம் தொவங்கிட்டுப்போல” என்றான் பரமன்.

“காண்டாவனம் இல்லை. காண்டவ தகனம்” என்று திருத்தினான் தாமோதரம்.

“அது என்ன தகனண்டாப்பா?” என்று கேட்டான் அருளன்.

“இந்நாட்களிற்தான் அருச்சுனன் காண்டவம் என்ற வனத்தை எரித்தானாம். அதனாற்தான் இந்த நாட்களில் சூடும் வெக்கையும் அதிகரிப்பதாக நம் கிராமத்தவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால் உண்மை அதுவல்ல. சித்திரை முதல்வாரத்தில்தான் சூரியன் இலங்கைக்கு நேரே உச்சங்கொடுக்கிறான். அதனால்தான் சூடு அதிகரிக் கிறது' என்று விளக்கினான் தாமோதரம்.

தாமோதரம் காலையில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வருகையில் காலில் செருப்பின்றியே வந்தான். இப்போது வெறுங்காலுடன் வீட்டுக்குப் போவதை எண்ணியபோது அவனுக்குத் திகிலா யிருந்தது. மெதுவாக பனிச்சை மரத்தடிக்கு வந்து அதன் நிழலின் குளுமையிற் சில விநாடிகள் தரித்து நின்று அங்கிருந்து வேலி ஆமணக்குகள் விழுத்தும் நிழலில் காலடிகள் பதியுமாறு ஓடியே சென்றான் வீட்டுக்கு. யாழ்ப்பாணம் படிக்கச் சென்ற தன் பின்னர் ஐந்து ஆண்டுகளாக காற்செருப்பைக் கழற்றாததினால் அவன் பாதங்கள் சூட்டைத்தாங்கும் சக்தியை இழந்திருந்தன.

வேர்த்துக் களைத்து வந்தவன் முற்றத்தின் மாமரத்தின் கீழ் சற்று தரித்து நின்று அதன் பின்னர் வீட்டை அடைந்தான். வீட்டுவிறாந்தையில் சௌந்தரம் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். தாமோதரத்தைக் கண்டதும் அவள் தன் இருக்கை யிலிருந்து எழுந்து நின்றாள். அவள் அறைக்குள் ஓடமுடியாதபடி தாமோதரம் அறைக்கதவின் வாசலிற் போய்நின்றான்.

தாமோதரம் அவள் கையில் இருந்த புத்தகத்தைப் பார்த்தான். அது கடந்த ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம். அதன் அட்டையில் ஸ்ரீமாவோ அம்மையாரின் படம் இருந்தது. அந்த அம்மையாருடைய கட்சியிற் போட்டியிட்ட அய லூர் முஸ்லிம் அபேட்சகர் அவ்விஞ்ஞாபனத்தை ஆலங்கேணியில் எல்லா வீடுகளுக்குமே கொடுத்தி ருந்தார். அவ்விஞ்ஞாபனத்தை பார்த்தபடியே,

“உலகிலேயே முதலாவது பெண் பிரதமரை இந்தநாடு பெற்றெடுத்திருக்கிறது. ஆனால் அப் பெண் பிரதமரின் நாட்டுப் பெண்களுக்கு எட்டாம் வகுப்புக்கு மேலே படிக்க விருப்பமில்லை.” என்றான் தாமோதரம்.

அவன் குத்தலைக் கேட்டதும் சௌந்தரத் திற்கு ஆத்திரம் வந்தது. காலையிற் தண்ணீர் குடத்தோடு நின்ற போதிலிருந்த வெட்கம் இப்போது இல்லை. குட்டக் குட்டக் குனியக் கூடாது என்று அவள் மனத்தில் எண்ணினாள். அந்த எண்ணத்தில்.

“அந்த அம்மையார் ஒண்ணும் பட்டதாரி இல்லை. அவருடைய கணவர்தான் ஒக்ஸ்போட் பட்டதாரி” என்றாள் பளிச்சென்று.

“அப்போ எதிர்காலத்தில் பிரதமராகலாம் என்ற எண்ணமாக்கும்”.

“எனக்கு பிரதமராக வரவேண்டிய தேவை யில்லை. ஆனால்”

“ராணியாக இருக்கவே விரும்புகிறேன்”.

“சரிதான் இப்ப உலகில இருக்கிற இங்கிலாந்து ராணியும் போனா அதுக்குப்பிறகு கடதாசிக் கூட்டத்தில்தான் நாலு ராணி இருப்பாங்க”

“நானும் ராணியாத்தான் இருப்பன்”

“எந்த நாட்டுக்கு”

“ஏதாவது ஒரு நாட்டுக்குத்தான் ராணியாக இருக்க வேணுமோ?”

15ம் பக்...



– பற்றி

# இரத்தத்தினால் சுத்தம்

கருகுக் கதை 119

அன்ரன் தன் நண்பர் சுப்பிரமணியத்தை நீண்ட வருடங்களின் பின் சந்தித்தார். முல்லைத்தீவிலிருந்து மட்டக்களப்பிற்கு தனிப்பட்ட வேலையாக வந்திருந்த சுப்பிரமணியம், தனது கல்லூரி நண்பனான அன்ரனைச் சந்திக்க வந்திருந்தார். இருவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் ஒரே அறையில் தங்கிப் படித்தவர்கள். சுமார் இருபத்தெட்டு வருடங்களின் பின் சந்திக்கின்றார்.

சுப்பிரமணியத்தின் மனைவி மற்றும் இரண்டு பெண்பிள்ளைகளும் 'சுவிஸ்' நாட்டில் வாழ்கின்றார்கள். சுப்பிரமணியத்திற்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் இருந்தார்கள். ஒருவன் போராளியாக மாறி வித்தாகிப் போனான்; மற்றவன் உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும்போது 'ஷெல்' விழுந்து செந்நீராகி சிதறிப்போனான்.

சுப்பிரமணியத்திடம் அன்ரன் கேட்டார்.

"என் மணி! நீயும் மனிசியோடையும் பிள்ளைகளோடயும் சுவிஸில் செற்றிலாகலாம்தானே! இங்க தனியக் கிடந்து ஏன் கஷ்டப்படுறே...?"

"அன்ரா! உங்கட ஏசுநாதர் பூமியில ரெத்தம் சிந்தி, உலகத்தின் பாவங்களைக் கழுவினார் எண்டு உன்னவிட எனக்கு நம்பிக்கையிருக்கு. அதேபோல என்ர இரண்டு மக்களும் இந்த மண்ணின் விடிவுக்கு பூமியில ரெத்தம் சிந்தியிருக்காங்க... அப்படியான இந்தப் பூமித்தாயை விட்டுப்போட்டு எப்பிடி நான் போற. இதற்கெல்லாம் காரணமானவங்களெல்லாம் பெரிய மனிசங்களப்போல திரியிறாங்க... கூட இருந்து காட்டிக்கொடுத்தவனுகளும் இருக்காங்க; பிள்ளைகளுக்கு வீரவசனம் பேசி உள்ளுக்க இழுத்து பலி கொடுத்துவிட்டு சொகுசு வாகனங்களில சொகுசா திரியிறவனுகளும் இருக்காங்க. நல்ல தலைவனெல்லாம் களத்துல செத்துப் போய்ட்டாங்கள். உன்ட ஏசுநாதருக்கு பாவிகள மன்னிக்கவும் தெரியும்; கோயில்ல செய்ததுபோல கயிறுபின்னி சவுக்கடி கொடுக்கவும் தெரியும்...."
என்று மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார். ஆவேசத்தினாலும் வேதனையினாலும் அவர் கண்கள் கலங்கியிருந்தன.

தொண்ணூறாம் ஆண்டு 'சும்பாவில்' வைத்து களவாடப்பட்ட தனது இரு தம்பிமாரையும் அன்ரன் நினைத்துப் பெருமூச்சு விட்டார்.

வீட்டுக்கு வீடு வாசற்படிதான் போலும் ....

## வினா விடைப் போட்டி - இல 36

### சரியான விடைகள்

1. விசுவாசமும் விடாமுயற்சியும்தான் வாழ்வில் பார்வையைக் கொடுக்கும், பாதையைக் காட்டும், பயணம் தொடரும், இறுதி இலக்கை அடையும் என்பதை பர்த்திமேயுவிடமிருந்து கற்றுக் கொள்வோம்.
2. தன் ஆவி, ஆன்மா, உடல் மூன்றும் படைத்தவரின் சாயலில் தன்னை ஒன்றிக்கச் செய்ய வேண்டும்: மனிதன் படைத்தவரின் விருப்பம் அறிந்து செயற்பட வேண்டும்.
3. பங்களாதேஷ் / வங்காள தேசம்
4. "கடவுளை ஏமாற்ற நினைக்கிறவன் ஏற்கனவே தன்னை ஏமாற்றிவிட்டான்" என கூறுகிறது.
5. அருட்பணி Fernando Chica Arellano
6. துளசி கவுடா (Tulasi Gowda) / கர்நாடகா மாநிலம்
7. ஒருவர் மற்றவரோடு இணைந்து திருஅவை இருக்கையிலும் இயக்கத்திலும், இறைவார்த்தைப் பகிர்விலும் அருளடையாளக் கொண்டாட்டங்களிலும், நம்பிக்கையை வாழ்வதும், பங்கேற்பதும் கேட்பதும், உரையாடுவதும் தேர்ந்து தெளிவதும் ஆகும்.
8. "அருள்மிகப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். கடவுளின் அருளை அடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்" என்றார்.
9. 2016ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வழங்கப்பட்டது.
10. கர்தினால் சார்லஸ் மாங்கோ

சரியான விடைகள் எழுதி 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

- V. மாக்கிறேற், உடையார் வீதி, கல்முனை - 02
- பீ. ஜ. கைடி பொன்கலன் 24/11, 1ம் குறுக்கு, செல்வநாயகம் வீதி, மட்.
- டியன் டஷி ராகல் பனிச்சையடி, மட்டக்களப்பு.

பங்குபற்றியோர் - 09 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 08 பேர்




**“இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அது ஒப்ப நில்!”**

இந்த குறளுக்கு நமக்கு கண்டிப்பாக விளக்கம் தெரிந்திருக்கும். நமக்கு துன்பம் வரும்போது சிரிக்க வேண்டும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியே, அந்த துன்பத்தைத் தூர காணாமல் போக்கிவிடும். அந்த துன்பத்திற்கு நிகர் அந்த நேர மகிழ்ச்சிதான்.

ஒரு வாழ்வியல் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு, இதற்கான ஒரு புது விளக்கம், நாம் ஒத்துக்கொள்கிறமாதிரி வேறு விதமாகக் கூறப்பட்டிருந்தது. இது ஆச்சரியமாக இருந்தது. “இடுக்கண் வருங்கால் நகுக” என்றால், துன்பம் வரும்போது நகர்ந்து விடுங்கள் என அர்த்தம். “அதற்காக, துன்பத்தைப் பார்த்து பயந்து ஓடி விடுங்கள்” என்று நேர் அர்த்தம் கொள்ளக்கூடாது. அந்த துன்ப மனநிலையிலிருந்து நகர்ந்து, தள்ளி நின்று, அந்த பிரச்சினையை, துன்பத்தை கவனியுங்கள். தீர்வு கிடைக்கும் என்பதாக விளக்கம் கூறப்பட்டிருந்தது.

இது எவ்வளவு தூரத்திற்கு உண்மை. ஒத்துக் கொள்ளக்கூடியதா? இது தொடர்பாக திருக்குறள் ஆர்வலர்களின் கருத்து, “இதுவரை திருக்குறளுக்கு என்று திருவள்ளுவரால் இயற்றப்பட்ட பொழிப் புரை ஒன்று தனியாகக் கிடையாது. படித்தவர்கள் அவரவர் வசதிக்கேற்ப, புரிந்து கொள்ளும் திறனுக்கேற்ப இயற்றிய பொழிப்புரைதான் வழக் கத்தில் இருந்து வருகிறது. ஆதலால், இதையும் ஒரு விளக்கமாக எடுத்துக் கொள்ளலாம் தவறொன்று மில்லை” என்பதேயாகும்.

‘நகுக’ என்றால் என்ன? யோசித்துப் பார்த்தால், இந்த ‘நகுக’ என்பதற்கு இப்படி நகர்ந்து போவது என்றே வைத்துக்கொண்டால் கூட நன்றாகத்தான் இருக்கும் என்றே தோணுகிறது. நீங்கள் மிகவும் துன்பத்தில் இருக்கும்போது, ‘அய்யய்யோ... நான் படும் துன்பத்தைச் சுற்றியே என் சிந்தனை சுழல்கிறதே’ என்று வெறுப்படைந்து விடாமல். ‘இல்லை! நான் மகிழ்ச்சியோடுதான் இருக்கிறேன்’ என்று நேர்மறையாக சிந்திக்கும் சித்தாந்தத்தின்படி, மாற்றுச் சிந்தனையைத் திணிக்க நீங்கள் முயற்சி செய்தால் மனதுக்குள் ஒரு போராட்டம்தான் உருவாகும். அதற்குப் பதிலாக உங்களின் சிந்த னையை நீங்களே சற்றுத் தள்ளி நின்று கவனிக்க ஆரம்பியுங்கள்.

துன்பமான சிந்தனையோ, மகிழ்ச்சியான சிந்தனையோ, சபலமான சிந்தனையோ... அதை விலகி நின்று பார்க்கும்போது, உங்களுக்குள்ளே புரிந்து கொள்ளல் நடக்கும். இது போன்ற மன நிலை வந்துவிட்டால் துன்பம், மகிழ்ச்சி இந்த

இரண்டுமே ஒன்றுதான். மகிழ்ச்சி எப்படி ஓர் அனுபவமோ, அதேபோல் துயரமும் ஓர் அனுபவமே. ஆனால், மனதில் அமைதியும், தெளிவும் இல்லாத மனிதர்களுக்கு மகிழ்ச்சி கூட சோகமான தாக போய்விடும். ஆனால் மனதுக்குப் பிடித்து விட்டால் இனிப்பு என்பது எப்படி ஒரு சுவையோ, அதேபோல் கசப்பும் ரசிக்கக்கூடிய ஒரு சுவைதான் என்பதை உணர்ந்து கொண்டால், "பிரச்சினையா ஐயோ, இதென்ன எனக்கு மட்டும் இப்படி கசக்கிறதே" என்ற புலம்பலோ இருக்காது.

சிறு பிள்ளையாக இருக்கும்போது, இனிப்பு ஒன்றுதான் சுவை. கசப்பு, துவர்ப்பு, புளிப்பு எல்லாம் சுவை இல்லை என்று நமக்கு நாமே முடிவெடுத்து, மற்ற சுவைகளுக்கு இடம் தராமல் மூடி விடுகிறோம். அதுபோல, மகிழ்ச்சி மட்டும்தான் நல்ல உணர்ச்சி மற்றது எல்லாம் வெறுக்கத்தக்க உணர்ச்சிகள் என்று எண்ணி நாம் அநேக உணர்ச்சிகளுக்கு கதவை திறப்பது இல்லை. பயத்துடனேயே அதை எதிர்நோக்காமல் விட்டு விடுகிறோம்.

பிரச்சினைகளை விட்டு ஓடவோ, விலகி ஒதுங்கவோ கூடாது. அப்படியே துன்பம் ஏற்பட்டு விட்டால், கத்தி கூப்பாடு போட்டு அதகளம் பண்ணுவதில் அர்த்தம் இல்லை. இது எனக்கான துன்பம் இல்லை. யாருக்கோ உள்ளது. அவர்களுக்கு வெளியில் ஒரு மூன்றாவது மனிதராய் நான் என்ன தீர்வு சொல்ல இயலும், முயலும் என்கிற மாதிரி தள்ளி நின்று யோசித்தாலே அந்த துன்பத்தின் வீரியம் குறைந்து, சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடும்.

ஒவ்வொரு நொடியும் நாம் என்ன செய்கிறோம் என்பதற்கான விளைவுதான், நாம் வாழ்க்கையில் சந்திக்கும் இன்பங்களும் துன்பங்களும். வேதனையான சூழ்நிலையில் எதிர்பாராத பாதிப்புகள் வாழ்க்கையை கேள்விக் குறியாக்குகின்றன. ஆனால், எந்த சூழ்நிலையிலும் வாழ்க்கையில் ஓர் அர்த்தம் உள்ளது என்பதை நாம் கண்டு கொள்ள வேண்டும்.

துன்பம் நம்மை சூழ்ந்து கொள்ளும்போது வாழ்க்கையின் இருண்ட பக்கங்கள் முழுமையாக ஆட்கொண்டது போல் தோன்றுகிறது. துன்பத்தை ஒரு எல்லையில் வைத்து பார்ப்பது கடினம் தான். பழகினால், பழக்கிக்கொண்டால், "இதெல்லாம் நமக்கு ஒரு விஷயமா" என்று நீங்கள் சொல்ல ஆரம்பித்து விடுவீர்கள். இப்படி எந்தச் சிறையிலும் அடைபடாமல், தள்ளி நின்று சிந்தனையைக் கவனிக்கும்போது மனம் தானாகவே அமைதி அடையும். திரைகள் விலகும், உண்மைகள் புரியும். வாழ்க்கை அழகாக, அற்புதமானதாக, ஒரு மலரைப்போல மௌனமாக மென்மையாக விரியும். முயற்சித்துத்தான் பார்ப்போமே, கொஞ்சம் நகர்ந்து நின்று!. ■

### *ஒரு வெண்மணற் கிராமம் ....*

"பிறகு"

"சொல்லட்டா"

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பது தாமோதரத்திற்குத் தெரிந்திருந்தாலும் அதை அவள் வாயாற் கேட்கவே அவன் விரும்பினான். ஆகவே "சொல்லேன்" என்றான்.

"நான் உங்களுக்குத்தான் ராணி' என்ற சௌந்தரம் இரு கைகளாலும் தன் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

தாமோதரம் அவள் வலதுகை மணிக் கட்டைக் குரங்குப்பிடியாகப் பிடித்துக் கொண்ட போது அவள் தன் அடுத்த கையை அவன் மேல் வைத்து "விடுங்கத்தான்' என்று திமிறினாள். ஆனால் தாமோதரம் விடவில்லை. நாணிச் சிவந்து விட்ட அவள் கன்னங்களில் முத்தமிட வேண்டும் என்று அவனுக்குள் கிளர்ந்தாலும் அதற்கும் அவனால் முடியாமல் இருந்தது. அவனுக்கும் வெட்கமா? அல்லது எல்லை மீறக் கூடாது என்ற நினைப்பா?

– தொடரும்....




**சிரிப்பாய்!**

மூன்றாம் நாள் சொன்னபடி உயிர்த்தார்
மூவுலகோர் மனங்கள் மகிழ்ந்து சிலிர்த்தார்
ஊன்றாதே உள்ளத்துள்
ஒருதுளியும் பாவத்தை
தோன்றாது துயரம் காண் சிரிப்பாய்...!



# (போ)சாதனை


– ந. பார்த்திபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.


"பாபு அம்மாவின் நூற்றாண்டு விழாவை நாங்கள் மிக சிறப்பாக செய்ய வேண்டும் ..."

"சரி ரவி பெரிய கொண்டாட்டமாக்கிவிடுவம். எல்லா பேப்பருக்கும் கொடுப்பம்...."

சொந்தங்களுக்கும் அயலிலுள்ளவைக்கும் நண்பர்களுக்கும் தெரியப்படுத்துவம்..."

"தெரியப்படுத்துறது மட்டுமில்ல, இன்விற்றேசன் அடிச்சுக் கொடுத்து எல்லோரையும் லஞ்சிற்குக் கூப்பிடுவம்....."

ரவீந்திரன் என்னும் ரவி மச்சானின் மகிழ்ச்சியான அங்கலாய்ப்பு அவர் பேச்சில் தெரிகிறது. இருக்காதா... நூறு வயது வரை சரஸ்வதி மாமி இருப்பது பெரிய விஷயம்தானே....

என் சிந்தனையைப் பார்த்து, "என்ன பாபு யோசிக்கிறாய்? லஞ்ச் கொடுப்பதைப் பற்றியா?" என்று கேட்கிறார்.

"ஓம் ரவி லஞ்சென்றால் இன்விற்றேசனில் பன்னிரண்டு மணி என்று போடலாம். அதற்கு முன்னர் வந்தாலும் ஏதாவது சோட்டீற்ஸ், ரீ அல்லது ஜூஸ் கொடுக்கலாம்...."

"கொடுப்போம்.... செலவைப் பற்றி கவலைப்பட வேண்டாம்...."

"துரையனும் பஞ்சனும் அனுப்புவாங்கள். மிகச் சிறப்பாக செய்ய வேண்டும் என்பதே அவர்கள் விருப்பம்."

துரைராசா இலண்டனிலும் பஞ்சலிங்கம் கனடாவிலும் இருக்கிறார்கள். நல்ல வசதி வாய்ப்புகளோடு இருக்கிறார்கள் என்று சரஸ்வதி மாமி அடிக்கடி சொல்கிறவர்.

"பாபு ஹோல் எடுத்துச் செய்வமோ?"

"ஏன் வீட்ல செய்யலாந்தானே?"

"வீட்ல பந்தல் போடவேணும், கதிரைகள் எடுக்கவேணும். இனிச் சாப்பாட்டு அடுக்குகளும் பார்க்க வேணும். அதற்கு இப்ப ஆருக்கு நேரம் இருக்கு...?"

"அப்ப ஹோலுக்கு புக்கிங் செய்வம். நீங்க சொல்றது மாதிரி இப்ப செய்யுறதுக்கு ஆர் இருக்கினம்... எல்லோரும் பிஸி... வேலை, வேலை என்று ஓடுதுகள்...."

"முன்பென்றால் எந்த ஒரு நிகழ்வெண்டாலும் வீட்டில் செய்வதுதான் வழக்கம். சொந்தங்கள், நண்பர்கள், அயலவர்கள் என்று ஆளும் பேருமாக ஆளாளுக்கு வேலைகளைப் பங்கு போட்டுச் செய்தார்கள். அதில் ஒரு சந்தோஷமும் இருந்தது. இப்ப செத்த வீட்டைத் தவிர எல்லாத்துக்கும் ஹோல்தான்..... பங்காளராக யாரும் விரும்புவதில்லை...." ரவி ஆதங்கத்தோடு சொல்கிறார்.

"ஓமோம். இப்ப செத்த வீடுகளும்... கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் ஹோலிலதானே செய்யினம். உண்மையில் வீடுகளில் எத்தனைபேரைக் கூப்பிடுறது? அதற்கான அடுக்குகள் செய்யவேண்டும். கரைச்சல்தானே. இப்ப பொம்பிளையளும் வேலை....."

"உண்மைதான்... போன கிழமை கந்தசாமி மாஸ்டரின்ரை அந்தியேட்டி. வசந்தம் கல்யாண மண்டபத்தில் என்று காட் தந்திருந்தார்கள். நானும் பதினொரு மணிபோல போனன். ஒரு நாற்பது நாற்பத்தைந்து பேரளவில் வந்திருந்தார்கள். ஹோலில் ஒரு மேசையில வெள்ளைச் சீலை விரித்து கந்தசாமி மாஸ்டரின் போட்டோ வைத்து மாலை போட்டு இருந்தார்கள். இரண்டு குத்து விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன...."

“கல்யாண வீடு, சாமத்தியச் சடங்கென்றால் மேடை, மேளம், ஐயர், கும்பம், வீடியோக்காரர், போட்டோக்காரர் என்று நிறபதோடு சடங்குகளும் கனக்க.... இது அந்தியேட்டி....?”

“அதுதான் எனக்கும் ஒரே யோசனை. சரி நடக்கிறதைப் பார்ப்பம் என்று இருந்தன் .... கந்தசாமி மாஸ்டரின் மகன், ‘எமது அழைப்பை ஏற்று அஞ்சலி நிகழ்வுக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கும் வந்து கலந்துகொண்டவர்கள், அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும்படி கேட்கிறேன்’ என்றார்.

குடும்ப உறுப்பினர்களின் மலர் அஞ்சலியும் மற்றவர்களின் மலர் அஞ்சலியும் முடிய நினைவஞ்சலி உரைகள். பிறகு சாப்பாட்டு நிகழ்வு நடந்தது. நூறுபேருக்குக் குறைவாகத்தான். ஆனால் ஹோல் எடுத்திருந்தார்கள்....”

“முன்னர் கல்யாண வீடென்றால் ஒரு மாதத்திற்கு அந்த வீட்டில் கொண்டாட்டமாகவும் எல்லோருக்கும் சாப்பாடும்... அதுவே மரண வீடென்றால் அந்த வீட்டிற்கு அந்த ஊரே ஒரு மாதத்துக்கு சாப்பாடு கொடுக்கும் என்றும் அம்மா சொல்வார்” என்று ரவி கூறுகிறார்.

“உண்மைதான் சரஸ்வதி மாமியினுடைய நூறு வருட காலத்தில் எவ்வளவு மாற்றங்கள்....? கிராமங்களிலெல்லாம் எவ்வளவு மாறிப் போய்விட்டன...”

“அப்ப ரவி நாங்களும் வீட்ல செய்வமோ?”

“சீச்சி... அதுல நிறைய கஷ்டம் இருக்கு. இப்ப உள்ள ஆட்களுக்கு வந்து போவதே பெரிய வேலை போல் தெரிகிறது. இதுக்குள்ள வீட்லயென்றால்.... ஹோலே நல்லது...”

“இல்லை வீட்லயென்றால் வீட்டையும் வீடியோ பண்ணலாம். துரையும் பஞ்சனும் ஊருக்கு வந்தே எவ்வளவு காலம் ஆகுது. வீட்டையும் பூந்தோட்டத்தையும் பார்த்ததும் போலாகும்....”

“அதெல்லாம் வீடியோகாரனிட்டைச் சொன்னால் அவன் செய்து விடுவான். போட்டோக்கள் எடுப்பதற்கும் வீடியோ எடுப்பதற்கும் ஹோல்தான் பொருத்தமாக இருக்கும். நீ மற்ற விஷயங்களை பார்....”

‘சரி, சரி...’ என்று சொல்லிக்கொண்டு நான் புறப்பட்டு விட்டேன்.

சரஸ்வதி மாமியின் நூறு வருட வாழ்வில் எனக்கும் ஒரு பகுதி தெரியும். பாவம், பியோன் வேலை செய்த முருகேசு மாமாவைக் கைப் பிடித்து பட்ட பாடுகள்..,. ?

உத்தியோகம் புருஷ லட்சணம். முருகேசு மாமா காலை ஆறு மணிக்கு நல்ல பிள்ளைபோல் போய் மதியம் பன்னிரண்டு மணிக்கு வெறிக்குட்டியாக வருவார். திருமணத்திற்கு முன் அவர் குடிப்பது சரஸ்வதி மாமியின் பெற்றோருக்குத் தெரியாது. அவருடைய குடி தாலிக்கொடியை வைத்து தண்ணி போடும் மனிதன் என்பது போன்றது.

அந்தக் காலத்தில் தாலிக்கொடியை யார் கொடுத்தார்கள்? சீதனத்தை எங்கிருந்து கொடுப்பது? அடியூறல் இல்லாத குடும்பத்தில் நான்கு பெண்களுக்கு மூத்தவள் சரஸ்வதிமாமி.

ஒரு காலத்தில் சரஸ்வதி மாமிக்கு புகழாரம் சூட்டியவர்கள், ‘அவள் பெயருக்கேற்ப குணவதி, பழகுவதற்கு நல்லவள், யாரையும் எடுத்தெறிந்து பேசாள், சீறிச் சினக்காள். அது தான் அவளுக்கு அரசாங்க உத்தியோக மாப்பிள்ளை கிடைச்சிருக்கு என்றனர். கோழி மேய்க்கிலும் கோறணை மேந்தில மேய்க்கோணும் என்று சொல்லுமளவுக்கு போஸ்ற் பியோன் என்றாலும் பென்சனியர் மாப்பிள்ளையெல்லோ’ என்பதாகப் பேசப்பட்டதாம் என்று சரஸ்வதி மாமி சொல்வார். ‘மாமிக்குப் பெருமைதான்...’ என்று நாங்கள் சொன்னால், ஒரு பாட்டம் அழுது தீர்த்து விடுவார்.

“எட தம்பிமார் என்ரை அப்பு–ஆத்தையோடை நாங்கள் நாலு பெட்டையளாயிருந்தும் எவ்வளவு நீரோசையாக இருந்தம். இந்தாளை எப்ப கட்டினனோ எல்லாம் போச்சு...”

சரஸ்வதி மாமி எல்லோருடனும் நல்ல மாதிரி. என்னோடு ஒரு படி மேல். நான் ஆறாம், ஏழாம் வகுப்பு படிக்கிற காலத்திலேயே எனது பாடப்புத்தகத்தில் இருக்கும் கதைகளை வாசித்துக் காட்டுவதும் சொல்வதும்.... அதனாலும் மாமிக்கு என்னைப் பிடிக்கும். அதுதான் பல மருமகன்கள், பெறா மகன்கள் இருக்கும்போதும், ரவி என்னிடம் இந்தப் பொறுப்பை விட்டிருக் கிறார்.

**– தொடரும்....**

# இலக்கிய மஞ்சரி

## கருத்துப் பிழைகள்



- ஆழியோன்

சில ஆண்டுகளுக்கு முன்பு தடித்த அட்டையில் அச்சிடப்பட்ட விளம்பரப் பதாதைகள் மின் கம்பங்களிலும், தொலைபேசி கம்பங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் பின்வரும் வாக்கியங்கள் அச்சிடப்பட்டிருந்தன. "தற்போது புதுப்பொழிவுடன் எமது முற்சக்கரவண்டிகள் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. விரையுங்கள்!"

இப்பாதாதைகளில் எழுத்துப் பிழைகளும் கருத்துப் பிழைகளும் இருந்ததை விளம்பரதாரர் அவதானிக்கவில்லையா? அல்லது அக்கறைப் படவில்லையா...?

சகல வாகனங்களுக்கும் முன்புறம் ஒரு சக்கரமோ அல்லது இரண்டு சக்கரங்களோ கண்டிப்பாகக் காணப்படும். இப்பதாகையில் முச்சக்கரவண்டியொன்றின் படமும் பொறிக்கப் பட்டிருந்தது. மூன்று சக்கர வண்டியானால் முச்சக்கர வண்டியென்றே அழைக்கப்படும். இப்பதாகையில் முச்சக்கர வண்டியானது 'முற்சக்கர வண்டி'யென தவறாக அச்சிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, 'புதுப்பொலிவுடன்' என்று வரவேண்டிய சொற் பிரயோகம் 'புதுப்பொழிவுடன்' என்று காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

'பொலிவு' என்றால் மலர்ச்சி, செழிப்பு, அழகு, எழுச்சி எனப் பொருள்பெறும். 'நிறைந்து வழிதல்' என்பதுதான் 'பொழிவு' எனப் பொருள்படும்.

எத்தனையோ பிழைகளுடன் இப்பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது என்பது புரிகின்றதல்லவா....?

பல தினசரிகளிலும், சஞ்சிகைகளிலும், செய்தி ஒலி/ஒளி பரப்புகளிலும் கருத்து மயக்கங்கள் காணப்படுகின்றன. தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் ஓட்டமாவடி பாலத்தில் வைத்து ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் (இறந்தவரின்) சகோதரர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக அப்போது பதவியிலிருந்தார். இறந்தவரின் அடக்கம் நிறைவேற்றப்பட்ட பின் அடுத்தநாள் தினசரியொன்றில் இப்படியொரு தலைப்புச் செய்தி இடம்பெற்றிருந்தது,

"சுட்டுக்கொல்லப்பட்ட
பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரனின் இறுதிக்கிரிகைகள் நேற்று இடம்பெற்றன". இதில் "சுட்டுக்கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின்" என்ற சொற்றொடர்கள் முதல் வரியில் ஆகப்பெரிய தடித்த எழுத்துகளிலும், "சகோதரனின் இறுதிக்கிரிகைகள் நேற்று இடம்பெற்றன" என்பது அடுத்தவரியில் சிறிய அளவிலான தடித்த எழுத்துகளிலும் அச்சிடப்பட்டிருந்தன.

பத்திரிகையை மேலோட்டமாக முதன்முதலில் பார்க்கும் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்றுதான் முதலில் அனுமானிப்பார். பின்னர் தொடர்ந்து வாசிக்கும்போதுதான் செய்தியின் உள்ளடக்கம் புரியும்.

"ஓட்டமாவடி பாலத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவரின் இறுதிக்கிரிகைகள் நேற்று இடம்பெற்றன. இவர் பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரர்" என்று எழுதியிருந்தால் தெளிவாகப் புரிந்திருக்கும்.

அண்மையில் உணவுப் பொதிகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுவிட்டன. ஒரு உணவுச் சாலையில் காட்சிப்படுத்தியிருந்த உணவுப்பட்டியல் இவ்வாறு காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| கோழிச்சாப்பாடு | - | ரூபா 300 |
| மீன் சாப்பாடு | - | ரூபா 250 |
| முட்டை சாப்பாடு | - | ரூபா 230 |
| மரக்கரிச்சாப்பாடு | - | ரூபா 200 |

மரக்கறியைச் சாப்பிடலாம்; மரக்கரியை எவ்வாறு சாப்பிடுவது?

"அப்படியே செய்யுங்கள், அப்படியே செல்லுங்கள்" என்பது இந்திய அலைவரிசைகளில் "அப்படியோ செய்யுங்கள்; அப்படியோ செல்லுங்கள்" என்றுதான் ஒலி/ஒளிபரப்பப்படுகின்றன. தற்போது நம்மவர்கள் சிலரும் "அப்படியோ..." என்றுதான் பாவிக்கத் தொடங்கியுள்ளார்கள்; தவிர்த்து விடுங்கள் ●●●



# அல்லேலூயா

## பாட வைத்துவிட்டீரே...!



– பீ.ஐ. கைடி பொன்கலன

கிரணம் பல சோடிக்கப்பட்டு மனுமகனையே
இரணமாக்கத்தேடி யலைந்த பாவிகளெல்லாம் – சிலுவை
மரணமேயவர்க்குப் பொருத்தமென கோரிக்கை விடுத்தனரே,
சரணமே கதியென அந்தப் பாவிகளுக்கு தன்னுயிர் ஈந்தீரே,
சீரணிக்க முடியாதென்றாலும் உயிர்த்தெழுந்து விட்டீரே,
அரவணைத்தாட்கொண்டு அல்லேலூயா பாடவைத்து விட்டீரே!

இன்று ரஷ்யாவும், உக்ரைனும் உயிரைக் காவுகொள்கின்றனவே,
அன்று ரட்சகரையும் இப்படித்தானே காவுகொள்ளத் துடித்தார்கள்,
இன்று மிஷயிலும் விமானங்களும் போட்டியாக சுழல்கின்றனவே,
அன்று விஷ வலை விரித்தே மீட்பரைக் கொல்ல முயன்றனரே,
இன்று ஈராயிரத்துக்கும் மேல் உயிர்கள் பலியாகின்றனவே,
அன்று ஈராயிரமாண்டுகட்கு முன்பே உயிர்த்து அல்லேலூயா
பாடவைத்து விட்டீரே!

பரிபூரண வாழ்வுதனை மரணத்தால் வென்றபின்பே – முழுத்
தரணியையுமே முற்றாக அடிபணிய வைத்துவிட்டீரே,
வரம்தரும் வார்த்தைகளெல்லாம் உம்மிடமேயுள்ளதே – பேசவே
காம்தாரும், காத்து அருள்புரியும் ஆண்டவரே – இனிக்
கொரோனாவும் நம்மை விட்டகலுட்டுமென்றே,
அன்றாடம் அல்லேலூயா பாடவைத்து விட்டீரே!

## பார்வைகள் பலவிதம் - 12

– ஹென்றி –



ஒரு முட்புதரில் தேள் ஒன்று மாட்டிக் கொண்டது; வெளியே வர முடியவில்லை. அதைக் கண்ட துறவி அந்தத் தேளை விடுவிக்க முயன்றார். தேள் அருகில் அவர் கை சென்றதும் தேள் அவரைக் கொட்டியது. முட்புதரும் அவர் கையைப் பதம் பார்த்தது. இருந்தாலும் அத்துறவி, தேளை விடுவிக்க மீண்டும் மீண்டும் முயன்றார். அருகிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் பொறுமையிழந்தார். அத்துறவியிடம் "உமக்கு கொஞ்சமும் மூளை இல்லையா? அந்தக் தேள்தான் உம்மைக் கொட்டிக் கொண்டே இருக்கிறதே, ஏன் அதை விடுவிக்க தொடர்ந்து முயற்சி செய்கிறீர்" என்று கேட்டார். அதற்கு அத்துறவி, "கொட்டுவது தேளின் குணம் அதை மாற்ற முடியாது. அதற்குப் பயந்து கஷ்டப்படும் ஒரு ஜீவனைக் காப்பாற்றும் என் குணத்தை நான் ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும்?" என்று பதில் கேள்வி கேட்டார்.

மிருகக் குணத்திற்குப் பயந்து, நம்மில் உறைந்திருக்கும் தெய்வீகத்தை நாம் மறைக்க வேண்டுமா? மறக்க வேண்டுமா....?



"மனிதர்களிடம் அன்பு செலுத்துவதே உண்மையான மதம்"
"ஒழுக்கத்தோடு வாழ்பவன் சுகமாக தூங்கி எழுகிறான்"
"எதற்கும் அளவுண்டு. ஆனால் தர்மத்திற்கு அளவில்லை"

# தீரவியம் (Autism)

## பிள்ளைநேய பாடசாலை அகவை ஐந்து



■ அருட்சகோதரர் ஸ்ரீபன் மத்தியூ FC



"ஓட்டிசம்" என்று அழைக்கப்படுகின்ற மூளை விருத்தி நிலைக் கோளாறு வாழ்நாள் முழுவதும் நீடிக்கக்கூடிய ஒரு பிரச்சினையாகும். இதுதொடர்பாக மருத்துவ துறை சார்ந்தவர்களைத் தவிர ஏனையோருக்கு ஒரு தெளிவின்மை காணப்படுகின்றது. இக்கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை உலகளாவிய ரீதியில் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகாதார, கல்வி, சமூக பராமரிப்பு, வழிகாட்டல் ஆலோசனை கூறல் போன்ற பல சேவைகள் நல்ல தரத்தில் உள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இச் சேவைகள் அடிமட்டத்திலேயே உள்ளன. இலங்கையைப் பொறுத்தமட்டில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பராமரிப்பு சிகிச்சை நிலையங்களே இல்லை. வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கும் நிலை காணப்படுகின்றது.

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நடத்தை கோலங்களைச் சுருக்கமாகக் கூறின், மொழியாற்றல், கண்பார்வை, செவிப்புலன், தானாக இயங்க முடியாத நிலை, ஒரு செயலை, சொல்லை மீள, மீள வலியுறுத்தல், புறழ்வு நடத்தைகள், சமூக தொடர்புகள், குறிப்பாக சொன்னால் சமூக இசைவாக்கமின்றி தன்னிலை உணர்வற்ற குறைபாடு உள்ளவர்களாகவும், கற்றல் இடர்பாடுகள் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

"ஓட்டிசம்" பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் இதனுடைய இடைத்தாக்கம், பெற்றார், அயல், கல்வி போன்ற சமூகத்தில் ஒவ்வாத அபிப்பிராயங்களாகவும், தாழ்வு மனப்பான்மை வேண்டா வெறுப்போடு தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இக்கோளாறு ஒரு நோயல்ல; மனித மூளை வளர்ச்சிப் படியில் ஏற்படுகின்ற ஓர் தாக்கம் என்பதை சமூகம் விளங்கிக் கொள்வது மிகக் குறைவு. இதனால் தவறான, பிள்ளையின் வளர்ச்சிக்கு ஒவ்வாத அணுகு முறைகளை பெற்றார் கையாளுகின்றனர்.

மட்டக்களப்பில் உளநல மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், பாடசாலை விசேட கல்வி அலகு, மருத்துவ சமூகம் என பலதரப்பட்டவர்களும் "ஓட்டிசம்" சிறுவர்களை இனங்கண்டுள்ளனர். ஆயினும் அவர்களை நல்நிலைக்கு கொண்டுவர இடர்பாடுகள் உண்டு என்பதையும் உணர்ந்தனர். எனினும் மூளை விருத்தி கோளாறினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், உளநல விசேட மருத்துவர் வைத்தியர் யூடி றமேஸ் ஜெயக்குமார் அவர்களிடம் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமானது. இவ்வாறான பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை நிறுவ வேண்டும், அவர்களை சீராக்கம் செய்யவேண்டும், நன்னிலைக்கு கொண்டுவர வேண்டும், சமூகத்திற்கு "ஓட்டிசம்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. அதற்கான இட வசதிகள் பயிற்சி வளவாளர்கள், பொறுப்பெடுப்பவர்கள், அனுசரணை வழங்குபவர்கள், நிதிநிலைமை, எவ்வாறான சிகிச்சை

வழங்கலாம் போன்ற எண்ணங்கள் நாள்தோறும் அவரது சிந்தனையில் உருவெடுத்துக்கொண்டே இருந்தது. அப்போதுதான் உளநல சேவையில் ஈடுபடுகின்ற, அப்போஸ்தலிக்கப் பணியாற்றுகின்ற அன்புப்பணி சகோதரர்கள் (Brothers of Charity) துறவற சபையின் சேவை வெளிச்சத்திற்கு வந்தது.

மட்டகளப்பு Brothers of Charity சகோதர இல்ல மேலாளர், ஏனைய அருட்சகோதரர்களோடு கலந்துரையாடி எமது சகோதர இல்லத்தின் ஒரு பகுதியில் நடத்தக்கூடிய வாய்ப்பு உண்டு என்பதைக் கண்டறிந்தோம். நாமும் எமது இலங்கைக்கான சபை முதல்வர், ஆசிய பிராந்திய சபை முதல்வர் ஊடாக உரோமையில் இருக்கும் எமது சபையின் அதி மேலாளர். Rev. Bro. Rene Stockman அவர்களுக்கு செய்தி அனுப்பி, அவரும் அவரது ஆலோசக குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்து பலருடன் கலந்துரையாடி ஆய்வு செய்து சகோதரர் இல்லத்தின் ஒரு பகுதியில் நடாத்தலாம் என்று பேருவகையோடு அனுமதி வழங்கினார். அதிமேலாளர் அருட்கலாநிதி Rev. Bro. Dr. Rene Stockman அவர்கள் உளநல துறையில் பாண்டித்தியம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செயற்திட்டங்கள் உடனடியாக தீட்டப்பட்டன, மருத்துவ துறைசார்ந்த விசேட பொது மருத்துவர்கள், மருத்துவபீட விரிவுரையாளர்கள், கல்வித் துறை சார்ந்தோர், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் என்று பல்வேறு அமைப்புக்களுடன் கலந்துரையாடப்பட்டு இடவசதிகள் ஆயத்தம் செய்யப்பட்டன. பயிற்சி வளவாளர்களும் தெரிவுசெய்யப்பட்டு உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

“தீரனியம்” சிறுவர்நேய பாடசாலை என்ற பெயருடன் 2017ம் ஆண்டு சித்திரை மாதம் 8ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி மேதகு கலாநிதி யோசப் பொன்னையா அவர்களாலும், எமது சபையின் ஆசிய பிராந்திய முதல்வர் மேதகு அருட்சகோதார் Rev. Bro. Bekaert Godfried அவர்களாலும் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜெயவர்தன பண்டார அவர்களினாலும், ஏனைய விசேட அதீதிகளினாலும் திறந்துவைக்கப்பட்டது. ஏழு தீரனியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட தீரனியத்தில், இன்று 60க்கும் மேற்பட்ட தீரனியர்கள் திறன் அபிவிருத்தி பயிற்சி பெறுகின்றனர். ஒருசிலர் முன்பள்ளி பாடசாலைகளிலும், முறைசார் பாடசாலைகளிலும் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்பட்டு கல்வி கற்பதோடு பிற்பகலில் தீரனியத்தில் பேச்சுத்திறன், மொழியாற்றல் பயிற்சியும் பெற்று வருகின்றனர்.

தீரனியம் பாடசாலையில் செயலாற்றும் திறன் அபிவிருத்தி வளவாளவர்கள் விசேட பயிற்சி பெற்று, அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர். இவர்களுக்கு வாரந்தோறும் தொடர்பயிற்சி செயலமர்வாக திறன் அபிவிருத்தியில் புதிய புதிய அணுகுமுறைகள் கொடுக்கப்படுகின்றன.

தீரனியத்தின் தூர நோக்கானது, நடத்தைசார் சமூக இசைவாக்கத்தை உருவாக்கல் என்பதாகும். பணி நோக்கானது, பரிவிரக்க அன்பினூடாக கல்வி, மருத்துவ இடையீடுகளின் மூலம் சமூக பொருத்தப்பாட்டுடன் மாண்போடு வாழ உடல், உள, அறிவு, உணர்வுசார் திறன் அபிவிருத்தியை வழங்குவதாகும்.

இதன் அடிப்படையிலேயே தீரனியர்களுக்கு, பேச்சு சிகிச்சையாளரால், இயன் மருத்துவம், தசை நார் திறன் அபிவிருத்தி பயிற்சிகள், சமூக இசைவாக்கம், தானே தனது கடமைகளை நாளாந்தம் செய்யும் திறன் பயிற்சிகள் போன்றவை கொடுக்கப்படுவதோடு உளநல மருத்துவம், குழந்தைநல மருத்துவம் போன்ற மருத்துவ பரிசோதனைகளும் நடைபெறுகின்றன. அத்தோடு பெற்றார் சந்திப்பானது உளநல மருத்துவர் டாக்டர் யூடி றமேஸ் ஜெயக்குமார், திருமதி தர்சினி ஜெயக்குமார் அவர்களினாலும் ஆலோசனை வழிகாட்டல், புதிய திறன் செயற்பாடுகளை வழங்குதல், யோகாசனப்பயிற்சி போன்றவைகளும் வழங்கப்படுகின்றன. ஓட்டிசம் தினம், பொங்கல் விழா, ஒளி விழா, ஆசிரியர் தினம், கலாச்சார விழா போன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

இவற்றோடு மட்டக்களப்பு மாவட்ட அனைத்து செயலகங்கள் ஊடாக நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலையில் தரம் ஒன்று கற்பிக்கும் ஆசிரியர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் வளவாளர்கள், மாவட்டத்திற்கு வெளியே மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை போன்ற மாவட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கும் “ஓட்டிசம்” பற்றிய விழிப்புணர்வு வதிவிட கருத்தரங்குகளாக கொடுக்கப்பட்டன.

– 23ம் பக்கம் பார்...





# என்னதான் நடக்கின்றது நம் நாட்டில் ?

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக பத்திரிகைகள் அச்சிடும் கடதாசிக்கு பெரும் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் 'திவயின', 'ஐலண்ட்' ஆகிய பத்திரிகைகளின் அச்சுப்பதிப்பு நிறுத்தப்பட்டு விட்டது; இலத்திரனியல் பதிப்புகள் மட்டும் வெளிவரு கின்றன. சஞ்சிகை வெளியீடுகளும் சிக்கல்களுக்குள்ளா கிவிட்டன. ஒரு மாத வெளியீட்டுக்கான தற்போ தைய செலவு முன்னர் (ஓரிரு மாதங்களுக்கு முன்பு) மூன்று மாதங்களுக்கு செய்யும் செலவுக்கு ஈடாகி விட்டது. சஞ்சிகைகளின் விலையையும் அதிகரிப்பதும் இயலாததாகிவிடும். அதனால் விற்பனையும் படுத்து விடும்.

எழுபதுகளின் நடுப்பகுதியிலும் இவ்வாறான நிலைமை காணப்பட்டது; பத்திரிகைக் கடதாசி தட்டுப்பாடு. "வீரகேசரி" பத்திரிகை வெறும் எட்டுப் பக்கங்கள் கொண்டதாக தன்னைச் சுருக்கிக்கொண்டது: அதுவும் கழிவுக் கடதாசிகளில் தயாரிக்கப்பட்ட பத்திரிகைக் காகிதங்கள் பயன்படுத்தப்பட்டன. வெண்ணிற பத்திரிகை கடதாசிகளே கிடையாது. பத்திரிகைப் பிரியர்களான என்போன்றவர்களுக்கு அது பெரிய வலியாய்த்தான் இருந்தது.

எரிபொருட்களின் விலையும் எகிறுகின்றது; மிதிவண்டிகள்தான் ஆறுதல். உடற்பயிற்சியும் ஆகின் றது. சிக்கனமும் ஆகின்றது. ஆனால் மிதிவண்டிகளின் விலைதான் ஏறி மிதிக்கின்றது. உணவுப் பொருட்க ளின் விலைகளையும் உயர்த்திவிட்டார்கள். இப்போது நினைத்தவர் நினைத்தமாதிரி விலைகளை அதிகரிக் கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதற்கு கடிவாளமேயில்லை; சாதாரண மக்களைத்தான் கடிக்கின்றது.

மின்வெட்டு கனகச்சிதமாய் அமுல் செய்யப் படுகின்றது. A, B, C, D ..... என்றவாறு வலயங்கள். அவ்வலயங்கள் பற்றி யாருக்காவது தெரியுமா...? வலயங்களைப் பிரித்தவர்களுக்கு மட்டும்தான் வெளிச்சம். மின்கட்டமைப்பு பராமரிப்பு வேலை களை (மின் தூண்கள் மாற்றுதல், மின் வடங் களை பராமரித்தல், மின் வடங்கள் மீது படும் மரங்களை, மட்டைகளை வெட்டுதல் போன் றன...) செய்யும்போது மின்னைத் துண்டிக்கின் றார்கள் தொடர்ந்து மின் வெட்டினையும் மேற் கொள்கின்றார்கள்.

மின்வெட்டுநேரம் இவ்வேலைகளை திட்ட மிடலாம்தானே....? நகர்ப்புறங்களில் மாத்திரம் வெட்டப்படும் தென்னை மட்டைகள் மரக்கிளை களை வாகனத்தில் ஏற்றி அப்புறப்படுத்துகின் றார்கள்; ஆனால் புறநகர்ப்பகுதிகள், கிராமப் புறங்களில் இவ்வொப்பந்தக்காரர்கள் போட்டது போட்டபடியே விடுகின்றார்கள். இதில் உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு எவ்விதக் கட்டப்பாடுகளும் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

"வயிறு, வருமானம் குறித்து மட்டும் நாட்டு மக்கள் சிந்திக்கக்கூடாது" என்று 'மஹிந்தானந்த' கூறியுள்ளதாக பத்திரிகை செய்தியொன்று

– 24ம் பக். பார்க்க....

# மாண்புமிகு மகளிர்



கவிதாயினி
சுஜீ பொர்செல்வி



பெண்களைப் போற்றியே
கண்ணெனக் கூறுவர்
பண்பென்ற எல்லையைத்
தண்டித்தே ஏற்றுவர்

மாண்புறு மகளெனப்
பாரினிற் கூறவே
காண்பவர் கண்களைக்
காட்சியாய் மாற்றுவர்

தாயென அழைத்திடத்
தரணியும் வணங்கும்
சேய்களைப் பேணிடச்
சிறப்பதும் ஓங்கும்

மகளென அன்னிடத்
துன்பத்தை வெல்லுவாள்
தாரமாய் அவள்
சேவையில் மூழ்குவாள்

கடமைகள் ஒவ்வொன்றாய்த்
துள்ளியம் காட்டுவாள்
அன்பினை மொத்தமாய்
அணைத்தே தருபவள்

சகோதரர் வாழ்விலே
விடிவெள்ளி போன்றவள்
சந்ததி வாழ்விலே
நிலவதாய் நீள்பவள்

பெண்ணில்லக் கடமைகள்
வேறெங்கும் உண்டோ?
அவள் பார்வை இல்லாத
இடமேதும் உண்டோ?

வானுயரப் பறந்திடும்
விமானியும் ஆவாள்
சட்டத்தை நிலைநாட்டத்
துலாபாரம் சுமப்பாள்

அறிவினைத் துலக்கும்
ஆசானும் அவளே!
தர்மத்தை நிலைநாட்டும்
கண்ணகியும் அவளே!

இல்லறஞ் சிறந்திட
தன்னலம் காப்பவள்
கருத்துடன் அன்பினைப்
பரிமாறுபவளும் அவளே!

நாட்டினிற் கண்ணாய்
மிளிர்ந்திடும் தேவதை
அன்பினில் விளைந்தே
ஒளி தரும் தாரகை

பெண்களின் பெருமையைக்
கூறிட இனிமையே
அவளது சேவையும்
நாட்டுக்குத் தேவையே!

– 21ம் பக். தொடர்...


அகவை ஐந்தில் காலடி எடுத்து வைக்கும் தீரனியமானது, தீரனியர் மனித மாண்புடன், சமூக அந்தஸ்துடன் வாழவேண்டும், வளர வேண்டும் என்ற முனைப்புடன் எமது சபையின் God is Love என்ற அருள் மகுட வாக்கியத்திற்கமைய எமது சபையின் தலைமை மேலாளர் Rev. Bro. Dr. Rene Stockman F.C, இலங்கை முதல்வர் அருட்சகோ. ஆ. கிறீஸ்து ராஜன். F.C. தீரனிய பாடசாலையின் அதிபர் வி. மரியதாஸ். F.C. ஆகியோரின் நெறிப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் போன்ற அர்ப்பணிப்பான சேவையினூடாக காலத்திற்கேற்றவகையில் திறன் அபிவிருத்தியைக் கொடுப்பது விசேட அம்சமாகும்.


மேலும் Brothers of Charity ஆனது இலங்கையில் ஜாயல, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள மாற்றுத் திறனாளிகள் பாடசாலைகள், மட்டக்களப்பில் மாற்றுத் திறனாளிகள் விசேட தொழிற்பயிற்சி பாடசாலை, கல்முனையில் உளநல புனர்வாழ்வு பயிற்சி நிலையம் என்பவற்றினூடாக மனித மாண்புடன் உளநல விருத்தியில் அப்போஸ்தலிக்க சேவையினை ஆற்றி வருகின்றது என்பதும் குறிப்பிடத் தக்கது.

தீரனியம் இன்னமும் பல அகவைகளைக் கடக்க வேண்டும், தீரனியர்களின் வாழ்வு சிறக்க, மகிழ்சியான திறன் அபிவிருத்தியினூடாக மேன்மையான வாழ்வை நோக்கிய பயணத்தில் சிறப்பான சேவைகள் தொடரும் என்பதில் ஐயமில்லை. ■■■

# மண்ணகம் பொலிவுறப் பூத்தநல் விடியல்!

■ அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்





தரணிமுற்றாய்த் தழைக்கவேண்டு மென்பதவர் தாகம்
தன்னையவர் முழுதாய்த்தந்து சிலுவைதனைச் சுமந்தார்
வரமெதனையும் பெற்றுயரத் தவமிருந்து தானுயர்ந்தாரா?
வரமாகத் தனைத்தந்து வையமுரத் தனைத் தேய்த்து ஒளியானார்.

கல்வாரிமலை முகட்டில் முள்வாரிக்கோத்த முடிபுனைந்து
கசையடியும் கல்லெறியும் அடியுதையும் தான்மிக வாங்கி
பொல்லாதார் வசைமாரிப் பொழிவினிலே தான் குளித்தும்
புனிதம் மிகும் யுகம் பூக்கப் பொறுமைகாத்துச் சுதனானார்!

கண்ணீரில் அன்னைமரி, புனிதமகன் நிலைகண்டு துடிதுடிக்க
கண்ணிருந்தும் குருடரென கயவர்மிக வதைபுரிந்தார் புனிதர்தனை
புண்ணாகி உடல்முற்றும் குருதிமிக வழிந்தோடி ஒழுக
பொல்லாப் புலையர்முகம் பூரித்துக் கூத்தாடி மகிழ்ந்தார்.

யுகமீட்பரான எங்கள் இயேசுவை எவரொருவரும் காப்பதற்காய்
ஓடிவர எண்ணவில்லை ஒருதவிதானும் வந்து பண்ணவில்லை.
அகம் நொந்து பலரழுதார் ஆண்டவரைத்தான் தொழுதார்.
"அறியாமல் செய்கின்றார்" என்றுரைத்தார் அருளிறைவன் இயேசுபிரான்.

மரித்தார் உயிர்த்தார், மனிதர் வியந்தார், தொழுதார், அழுதார்
வையக விடியலின் மாசிலா ஒளியாய் மலர்ந்தார் இயேசு
எரித்த சாம்பலில் இருந்து பீனிக்ஸ் பறவையாய் சிறகு விரித்தார்
இயேசு இறைவன் ஆகிய மனிதர் மண்ணகம் பொலிவுறப் பூத்தநல் விடியல்

– 22ம் பக். தொடர்ச்சி ....

கூறுகின்றது. எவ்வளவு அற்புதமான மனிதரப்பா....!

இன்றைய பொருளாதார நெருக்கடி எப்படி வந்தது என்று வெவ்வேறு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சிறுபான்மை மக்களை சிறுமைப்படுத்துவதற்காக வாங்கிக் குவித்த ஆயுதங்களிற்கான கடன்கள், வருமானமே தராத திட்டங்களில் இடப்பட்ட முதலீடுகள், சிலரின் “பொக்கற்றுகளில்” திணிக்கப்பட்ட டொலர்கள் என்றவாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்களை பாக்கு வெட்டிக்குள் அகப்பட்ட பாக்குபோல் ஆக்கி விட்டன.

அண்மையில் இடம்பெற்ற சர்வகட்சி மகாநாட்டை மலையக அரசியல் கட்சியொன்றும் புறக்கணித்தது. அதற்கு பல காரணங்கள் கூறப்பட்டன. ஆனால், உண்மைக் “காரணம் அதுவல்ல என்று ஊடக வட்டாரம் ஒன்று குறிப்பிட்டது. மந்திரிசபை அந்தஸ்துள்ள மந்திரிப்பதவி கிடைக்காமைதான் காரணம் என அவ்வட்டாரம் சொன்னதாம். அதுமட்டுமல்ல மலையக மக்களும் எட்டிக் குட்டி விடுவார்கள் அல்லவா?

தற்போதைய அரசியல் நிலைமைகளை நாடிபிடித்துப் பார்த்து நமது பிரதேச ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் ஆடிப்போய் உள்ளார்களாம். அதுதான் சற்று நீளமான மௌனமும், அவையடக்கமும் போலும். ●●●

‘‘இந்த காலத்தில் மகான்கள் இல்லை என்று நினைப்பது தவறு. மகான்கள் எல்லா காலத்திலும்தான் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுகொள்ள நமக்கு அறிவும் ஆவலும் இல்லாததுதான் குறை’’





# திருஅவைச் செய்திகள்

## உலகிற்கு இப்போது தேவை அமைதி - ஐ.நா.

இரஷ்ய இராணுவம், உக்ரைன் குடிமக்களுக்கு எதிராக கட்டுப்பாடின்றி நடத்திவரும் கடும் தாக்குதல்களால் அந்நாடு உலகினரின் கண்களுக்கு முன்பாக துண்டு துண்டாகத் தெரிகின்றது என்றும், இப்போது உலகிற்கு அமைதி தேவை என்றும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமைப் பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள் கூறியுள்ளார்.

இரஷ்யாவின் இந்நடவடிக்கையால் நலிவடைந்து வரும் உலகளாவியப் பொருளாதாரம், பசிப் பிரச்சினையைக், குறிப்பாக, வறியோரை அது மிகவும் பாதித்துள்ளது என்றும், போரில் வெற்றியாளர்கள் என்று எவருமே இல்லை, மாறாக அது தோல்வியாளர்களையே உருவாக்கும் என்றும் உரைத்த அவர், இரஷ்யாவின் ஆக்ரமிப்பால், உக்ரைனில் குறைந்தது 24 மருத்துவ மையங்கள் உட்பட, சாலைகள், விமானத்தளங்கள், பள்ளிகள் போன்ற அனைத்தும் அழிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் தண்ணீர் மற்றும் மின்சாரம் இன்றி உள்ளனர் என்றும் கூட்டேரஸ் அவர்கள் கூறினார்.

சிறாரைப் பயன்படுத்துவோர் மற்றும், மனித வர்த்தகர்களுக்கு, போர் ஒரு கொடுந்துன்பம் அல்ல, மாறாக பெண்கள் மற்றும் சிறாரைக் குறிவைப்பதற்கு அது ஒரு வாய்ப்பு என்றுரைத்த கூட்டேரஸ் அவர்கள், 'பெண்களையும் சிறாரையும் பாதுகாக்கத் தொடர்ந்து போராடுவேன்' என்று உறுதியளித்தார். உக்ரைனில் ஒவ்வொரு மணி நேரமும், மரணம் மற்றும் அழிவால் கடக்கின்றது என்றும் உரைத்தார்.

## "கடவுளின் பெயரால் கேட்கிறேன், படுகொலைகளை நிறுத்துங்கள் ......"



போரினால் அழிக்கப்பட்டு வரும் உக்ரைன் நாட்டில், அப்போரால் பலியாகுவோர் மற்றும் பாதிக்கப்பட்டோரை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'உக்ரைனில் இடம்பெற்றுவரும் பயங்கரமான போரால் Mariupol நகர், மறைசாட்சிகளின் நகரமாக மாறி வருகிறது' என்று, தான் கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பணியை ஏற்ற ஒன்பதாம் ஆண்டு நிறைவு நாளாகிய மார்ச் மாதம் 13 திகதியன்று வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு, உக்ரைன் நாட்டில் இடம்பெற்றுவரும் போர் குறித்த தன் மன வேதனையை வெளிப்படுத்தினார்.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு, மனித சமுதாயம் என்ற கடல்மீது பயணிக்கிறது

கிறிஸ்தவ ஒன்றிப்பை மையப்படுத்தி, ஒப்புரவாக்கப்பட்ட பன்மைத்தன்மை என்ற தலைப்பில், Presbyterian கிறிஸ்தவ சபை திருப்பணியாளர் Marcelo Figueroa அவர்கள் எழுதிய நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நூலாசிரியரின் கிறிஸ்தவ ஒன்றிப்பு குறித்த கண்ணோட்டத்தைப் பாராட்டியுள்ளார்.

இந்த இலக்கியப் படைப்பை மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்கிறேன் எனவும், இந்நூலைப் பார்த்தவுடனேயே, இது மதங்களுக்கு இடையே இடம்பெறும் உரையாடல் பற்றிய நூலாகத் தெரிகின்றது. ஆனால், இந்நூலை ஆழ்ந்து வாசிக்கும்போது, இது ஓர் உண்மையான, தனிப்பட்ட, எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீகம் சார்ந்த, கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பயணமாக அமைந்திருப்பதை உணர முடிகின்றது எனவும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

2016ம் ஆண்டிலிருந்து 'லொசர்வாத்தோரே ரொமானோ' வத்திக்கான் நாளிதழில், பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே இடம்பெறும் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பயணம் குறித்து Marcelo Figueroa அவர்கள் எழுதிய பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

Marcelo அவர்கள் எழுதும் கட்டுரைகளை, எப்போதும் கவனத்தோடு வாசிப்பேன் என்றும், அவை கிறிஸ்தவ ஒன்றிப்புப் பாதையை நோக்கு வதற்கு தனக்கு உதவுகின்றது என்பதால், அவற்றைத் தொடர்ந்து வாசிப்பேன் என்றும், திருத்தந்தை தன் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

Marcelo அவர்கள், வத்திக்கானின் தினத்தாளான 'லொசர்வாத்தோரே ரொமானோ' (L'Osservatore Romano) அர்ஜென்டினாவில் பிரசுரிக்கப்படும் பொறுப்பை ஏற்று நடத்துபவர்.



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ், M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ், 142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775013977

## வினாவிடைப் போட்டி இல. - 38

1) நாம் நற்கருணை அடையாளம் நிறுவப்பட்ட புனித இரவாக எதனைக் கொண்டாடுகின்றோம்? ..........

2) 2023 இடம்பெறவிருக்கின்ற உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்பின் நோக்கம் என்ன? ..........

3) "உங்களுக்கு தோல்வி கிட்டும்போது ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால் நீங்கள் முயற்சி செய்யாவிட்டால் உங்களுக்குப் பெரிய அழிவே ஏற்பட்டுவிடும்" எனக் கூறியவர் யார்? ..........

4) லரலரல? ..........

5) கத்தோலிக்க சமூகத் தொடர்புகளின் பாதுகாவலர் யார்? ..........

6) பேராசிரியர் கலாநிதி மு. வரதராசனார் அவர்கள் 1937ம் ஆண்டு யூலை மாதம் "நவசக்தி" என்ற பத்திரிக்கையில் எழுதிய கட்டுரையின் தலைப்பு என்ன? ..........

7) "ஆண்டவரின் அடிமை" என்ற சொல்லின் நற்பண்புகள் எவை? ..........

8) தவக்காலத்துக்கு குறிக்கப்பட்ட மூன்று அறச் செயல்களும் எவை? ..........

9) பாக்கிஸ்தானில் உயிரிழந்த ஏழு ஆண்டுகளுக்கு பின் இறை ஊழியராக அங்கீகரிக்கப் பட்டுள்ளவர் யார்? ..........

10) நாற்பதுகளில் சிறுகதை துளிர்விடத் தொடங்கியதற்கு காரணமான எழுத்தாளர்கள் யார்? ..........

பெயர் : ..........

முகவரி : ..........

பங்கு / தொ.பே.இல : ..........

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 38**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**முடிவுத் திகதி : 30.04.2022**




**30.04.2022**

**சரியான விடைகளை 1 திருவெளிப்பாடு 1:20 ஆகிய பகுதியில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. "நீ காண்பதை ஒரு சுருளேட்டில் எழுதி ஏழு நாடுகளுக்கு அனுப்புமாறு யோவானிடம் கூறப்பட்டது. அவ் ஏழு நாடுகளும் எவை?

   ......................................................................................................................

   ......................................................................................................................

2. 'மறைத்து வைக்கப்பட்டுள்ள மன்னாவை வெற்றி பெறுவோருக்கு அளிப்பேன்" என எந்நகருக்கு கூறப்பட்டது? ..........................................................................

3. "ஏழு முத்திரைகளையும் உடைத்து ஏட்டைப் பிரித்து விடுவார்" என மூப்பருள் ஒருவர் யாரைக் கூறினார்? ..........................................................................

   ......................................................................................................................

4. இஸ்ரயேல் மக்களின் குலங்கள் அனைத்திலும் முத்திரையிடப்பட்டவர்களின் எண்ணிக்கை? ..........................................................................

5. "அபத்தோன்" என்பதன் பொருள்? ..........................................................................

6. விண்ணகத்தில் அரக்கப் பாம்புடன் போர் தொடுத்தவர்கள் யார்?

   ......................................................................................................................

7. "இது முதல் ................................. இணைந்த நிலையில் ........................... பேறுபெற்றோர்"

   ......................................................................................................................

8. ஆறாம் வானதூதர் தம் கிண்ணத்தில் இருந்ததை எங்கே ஊற்றினார்?

   ......................................................................................................................

9. "அல்லேலூயா" என்பதன் பொருள்:

   ......................................................................................................................

10. வெண்குதிரையின் மீது அமர்ந்திருந்தவர் பெயர் என்ன?

   ......................................................................................................................

**பெயர் :** ..................................................

**முகவரி :** ..............................................

..............................................

..............................................

**பங்கு / தொ.பே.இல :** ..............................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** ....................

..................................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**திருவிவிலியம் கற்போம் - 216**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**




# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 214 விடைகள்**

1. இஸ்ராயேல் வீட்டாரோடும், யூதா வீட்டாரோடும்
2. இரண்டாம் கூடாரம் / திருத்தூயகம்
3. கருஞ்சிவப்பு கம்பளி நூலால் கட்டிய ஈசோப்புச் செடியால்
4. திருவுளத்தை, திருநூல்
5. கோவிலின் திரைசீலைக்கு
6. ஏனோக்கு
7. ஈசாக்கின் மூலமே உன் வழிமரபு விளங்கும் என்றார்.
8. மன உறுதியோடு
9. ஏசாயா
10. இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

* **ச. பிரியதர்ஷிக்கா,**
152B, அன்னைபுரம்,
சொறிக்கல்முனை.

போட்டியில் பங்குபற்றியோர் – 08 பேர்
சரியான விடையளித்தோர் – அனைவரும்

* **கெயின் செலர்,**
பனிச்சையடி,
மட்டக்களப்பு.

* **சின்னையா யேசுராசா,**
சித்தி விநாயகர் வீதி,
புன்னச்சோலை,
மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 166 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **ஜீ. ஜெஸ்ரினா,**
பாடசாலை வீதி,
ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**


* **சி. பிரியங்கா,**
சதா சகாயமாதா ஆலய வீதி,
மகிழூர்முனை, களுவாஞ்சிகுடி.

**3ம் பரிசு - 200/=**

* C. **அன்தியா கேறல்லின்,**
இல. 10, கோணர் வீதி,
மட்டக்களப்பு.

பங்குபற்றியோர் – 29

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**



# நல்லது நினைத்தால் நடக்கும் ....

ஒரு பெரிய மடாலயத்தில் சீடர்கள் வட்டமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் ஒரு வாக்கு வாதம் எழுந்தது. அது என்னவென்றால், 'திருடனாக இருப்பவனுக்கு எப்போதும் கெட்டதுதான் நடக்கும்' என்று ஒரு பக்கமும், இன்னொரு பக்கம் 'இல்லை, நல்லதும் நடக்கும்' என்றும் வாதாடிக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களது குரலைக் கேட்டு வந்த ஜென் குரு, என்ன பிரச்சனை என்று கேட்டார். அதற்கு அவர்கள் அந்த வாக்குவாதத்தைக் கூறினர். ஆகவே அதில் உள்ள உண்மையைப் புரியவைப்பதற்கு, அவர்களுக்கு ஒரு கதையைக் கூற ஆரம்பித்தார்.

"ஜென்கை என்பவன் ஒரு சாமுராய் மகன். அவன் 'எடோ' என்ற இடத்திற்கு பயணித்தான். அங்கு ஒரு உயர் அதிகாரியிடம் பணியாளாக சேர்ந்து, அவரின் மனைவியைக் காதலித்து, மேலும் தற்காப்பிற்காக, அந்த அதிகாரியின் பெருந்தொகையை எடுத்துக் கொண்டு, அவருடைய மனைவியுடன் ஓடிவிட்டான். பின்னர், இருவரும் தொடர்ந்து சந்தோஷமாக வாழ்வதற்கு திருடர்களாக மாறினர். ஆனால் அந்த பெண், ஜென்கையின் நடவடிக்கைகளைக் கண்டு வெறுப்படைந்தாள். அதனால் அவள் அவனை விட்டு சென்று விட்டாள். மனமுடைந்த அவன் 'பூசன்' என்ற மாகாணத்தில் பிச்சைக்காரனாக இருந்தான்.

மேலும் தனது கடந்த காலத்தில் செய்த பாவத்திற்குப் பரிகாரமாக, ஜென்கை தனது வாழ்நாளில் சில நல்ல காரியங்களைச் சாதிக்க எண்ணினான். அப்போது ஒரு குன்றின் மீது ஓர் ஆபத்தான சாலை இருப்பதால், பல பேர் மரணம் மற்றும் காயம் அடைகின்றனர் என்பதைத் தெரிந்துகொண்டு, அங்கு அந்த மலை வழியாக ஒரு சுரங்கம் வெட்ட எண்ணினான். பகல் நேரங்களில் உணவுக்கு பிச்சை எடுப்பதும், இரவு வேளையில் சுரங்கம் தோண்டுவதை வேலையாகவும் செய்து வந்தான். முப்பது ஆண்டுகள் ஆயிற்று, சுரங்கப்பாதை 2.280 அடி நீளம், 20 அடி உயரம் மற்றும் 30 அடி அகலம் ஆனது. வேலை முடியும் இரண்டு ஆண்டுகளுக்கு முன், அவன் பணியாளாக ஒரு அதிகாரியின் கீழ் வேலை செய்தான் அல்லவா, அவருடைய மகன் ஒரு திறமைமிக்க வாள்வீரன். அவன் ஜென்கையை கண்டுபிடித்து பழிவாங்க வேண்டும் என்று தேடி அலைந்து வந்தான். அப்பொழுது அந்த ஜென்கையும் அவன் கண்ணில் தென்பட்டார். அதனால் ஆத்திரமடைந்த அவன் 'நான் உன்னை என் கைகளால் கொல்ல வேண்டும்' என்று கூறினான். அப்போது அந்த ஜென்கை 'நீ என்னை தாராளமாகக் கொள்ளலாம். ஆனால் எனக்கு ஒரு ஆசை உள்ளது. அது என்னவெனில் இந்த சுரங்கத்தை தோண்டி முடிக்க வேண்டும். முடித்ததும் நீ என்னை கொல்,' என்று கூறினான். எனவே அந்த மகனும் அந்த நாளுக்காக காத்திருந்தான்.

பல மாதங்கள் கடந்தது. ஜென்கை மட்டும் தோண்டிக்கொண்டிருந்தான். எதுவும் செய்யாமல் இருந்ததால், அந்த வாள்வீரன் மிகவும் சோர்வடைந்தான். அதனால் அவனும் ஜென்கைக்கு உதவியாக சுரங்கம் தோண்ட ஆரம்பித்தான். ஓர் ஆண்டு காலம் ஆனதும், அந்த மகன் ஜென்கையின் வலிமையையும் தன்னம்பிக்கையையும் கண்டு வியந்தான். கடைசியாக சுரங்கப் பாதை முடிந்தது. மக்களும் பாதுகாப்பாக அந்த சுரங்கத்தில் பயணித்தனர்.

'இப்போது என் தலையை துண்டித்துவிடு..., என் வேலை முடிந்தது' என்று ஜென்கை கூறினார். 'எப்படி நான் என் சொந்த ஆசிரியர் தலையை துண்டிக்க முடியும்?' என்று கண்களில் இருந்து கண்ணீர் வழியக் கேட்டான் வாள் வீரன்'' என்று கதையைக் கூறி முடித்தார் ஜென் குரு. பின் சீடர்களிடம், 'திருடனாக இருந்து, திருந்தியப் பின் நல்லதை நினைத்தால், அவனுக்கு நல்லதே நடக்கும்' என்று சொல்லி, உள்ளே சென்று விட்டார்.

**முகநூல் பக்கத்திலிருந்து ....**

பழிச் சொல்லையும், புகழ் மொழியையும் சமமான முறையில் ஏற்றுக்கொள்பவனே தியாகியாக இருக்க முடியும்.

**- மகாத்மா காந்தி**

குருக்களுக்கான வருடாந்த தவக்கால ஒன்றுகூடல்
மறையுரையாளர்: அருட்தந்தை S.J. இம்மானுவல்



கல்முனை மறைக்கோட்ட
பீடப்பணியாளர்களுக்கான
ஒன்றுகூடலும் நெறிப்படுத்தலும்



மகிழூர்முனை புதிய ஆலயத்திற்கான
அடிக்கல் நாட்டுதல்



- சிலுவைப்பாதை -
குருவிக்கல், வாகரை.



- சிலுவைப்பாதை -
தாண்டியடி.

